# தமிழ் அமுதம்


ஆசிரியர் :

**டாக்டர். மா. இராசமாணிக்கனார்**

M.A., L.T., M.O.L., Ph.D.,

தமிழ்த் துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.



வள்ளுவர் பண்ணை

137, பிராட்வே - சென்னை.1

வெளியீடு : 26
முதற்பதிப்பு: மே, 1959.
உரிமை ஆசிரியருக்கு

---

**விலை ரூபாய் 1-25.**

---

அச்சிட்டோர் :
பாரதம் அச்சகம்
14, உஸ்மான் ரோடு,
சென்னை - 17

# முன்னுரை

தமிழ் அமுதம் என்னும் பெயர்கொண்ட இந் நூல் பத்துக் கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டது. இவற்றுள் பல கட்டுரைகள் தமிழ் நூல்களை ஆராய்ந்து எழுதப் பெற்றவை. இக்கட்டுரைகள் தமிழ் ஆர்வமுடைய அனைவருக்கும் பெரிதும் பயன்படுவன வாகும். இலக்கியம், வரலாறு, கல்வெட்டு இவைகொண்டு ஆராய்ந்து வரையப் பெற்றுள்ள இக்கட்டுரைகள் தமிழர் அனைவருக்கும் பயன்படும் என்பது எனது நம்பிக்கை.

இதனை நன்முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ள வள்ளுவர் பண்ணை உரிமையாளருக்கு எனது நன்றி உரியது.

*தியாகராசர் கல்லூரி,*
*மதுரை.* } மா. இராசமாணிக்கம்.

# உள்ளுறை


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குந்தவ்வை | ... | ... | 5 |
| 2. | கம்பர் யார்? | ... | ... | 9 |
| 3. | நாட்டு வளம் | ... | ... | 12 |
| 4. | நாட்டார் நற்பண்புகள் | | ... | 16 |
| 5. | பிள்ளைவளர்ப்பு | ... | ... | 21 |
| 6. | ஒழுக்கக் கல்வி | ... | ... | 26 |
| 7. | சௌராஷ்டிரர் | ... | ... | 31 |
| 8. | தமிழர் கலைகள் | ... | ... | 36 |
| 9. | இலக்கியம்–I | ... | ... | 44 |
| 10. | இலக்கியம்–II | ... | ... | 68 |

# 1. குந்தவ்வை

## ‘குந்தவ்வை’ என்னும் பெயர்

“**அவ்வை**” என்னும் சொல் தாய், தவம் செய்யும் பெண், கிழவி என்னும் பொருள்களைத் தருவதாக நூல்கள் கூறும். ‘**அவ்வா**’ என்னும் சொல் கன்னடத்தில் ‘அம்மை’ என்னும் பொருளில்—நாம் ‘அம்மா’ எனப் பெண்களை அழைத்தற் பொருளில் வருகிறது. அதே சொல் தெலுங்கில் இன்று ‘பாட்டி’ என்னும் பொருளைத் தருகிறது. ‘குந்தவ்வை’ என்னும் சொல் ‘வள்ளியம்மை’, ‘முருகம்மை’ என்பன போலக் குந்த அவ்வை என இரு சொற்களால் ஆகிய தொடர். இப்பெயர் முதலாம் இராசராச சோழனது (கி. பி. 985—1014) தமக்கைக்கு வழங்கியதாகக் கல்வெட்டுக்களால் அறியலாம். இதற்கு முன் இப்பெயர், தமிழ் இலக்கியங்களிலோ கல்வெட்டுக்களிலோ காணுமாறில்லை. எனவே, இப்பெயர் வழக்குத் தமிழகத்திற்கு எங்கிருந்து வந்தது என்பதைத் தமிழராகிய நாம் அறிய அவாவுதல் இயல்பேயன்றோ ?

## சோழர்-இராட்டிரகூடர் உறவு

கி. பி. 10ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் சோழ அரசனாக இருந்த முதலாம் பராந்தகனது காலத்தில்

கன்னட நாட்டில் இராட்டிரகூடர் வன்மை மிக்க அரசர்களாக இருந்தார்கள். அவர்கள் கீழைச் சாளுக்கியரை ஒடுக்க முற்பட்டார்கள். கீழைச் சாளுக்கியர் கோதாவிரி, கிருஷ்ணையாறுகட்கு இடைப்பட்ட நாட்டை ஆண்டனர். பராந்தகன் ஆட்சியின் முற்பகுதியில் நான்காம் கோவிந்தன் இராட்டிரகூட அரசனாக இருந்தான். அரசியல் அறிவிற் சிறந்த பராந்தகன் அக்கோவிந்தனுக்குத் தன் மகளை மணம் செய்வித்து உறவுகொண்டான்.[1] ஆயின், அடுத்து வந்த இராட்டிரகூட அரசனான மூன்றாம் கிருஷ்ணன் என்ற கன்னரதேவன், பராந்தகன் ஆட்சியின் பிற்பகுதியில் சோழப் பெருநாட்டைத் தாக்கினான்; 'கச்சியும் தஞ்சையுங் கொண்ட கன்னரதேவன்' என்ற விருதுப் பெயரையும் பெற்றான்.

## சோழர்-சாளுக்கியர் உறவு

மூன்றாம் கிருஷ்ணன் சோழரைத் தாக்கியது போலக் கீழைச் சாளுக்கியரையும் தாக்கி முறியடித்தான். அதனால் இரட்டரை ஒடுக்கச் சோழரும் கீழைச் சாளுக்கியரும் உறவு கொள்ளலாயினர். கி. பி. 934 முதல் 945 வரை சாளுக்கிய அரசனாக இருந்த இரண்டாம் சாளுக்கிய வீமன் மனைவியர் இருவரை மணந்துகொண்டான். முதல் மனைவியான உற்சவை என்பவளுக்குத் தானார்ணவன் என்ற மைந்தன் பிறந்தான். இரண்டாம் மனைவியாகிய லோகாம்பாள் என்பவட்கு 'இரண்டாம் அம்ம' என்னும் மகனும் குந்தவ்வை என்னும் பெண்ணும் பிறந்தனர்.[2] சாளுக்கிய வீமன் குந்தவ்வை என்ற தன் மகளைப் பராந்தகன் மகனான அரிஞ்சயனுக்கு மணம் செய்வித்தான்.

---

1 டாக்டர் வேங்கடரமணய்யா, வேங்கிச் சாளுக்கியர், பக்கம் 177.

2 ஷை, பக்கம். 179—180

சோழனை அரிஞ்சயனுக்கும் சாளுக்கியன் மகளான் குந்தவ்வைக்கும் பிறந்தவனே இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தர சோழன்.

சுந்தர சோழனுக்கு இரண்டாம் ஆதித்தன், அருள் மொழித்தேவன் என்ற முதலாம் இராசராசன் ஆகிய மைந்தர் இருவரும் ஒரு பெண்ணும் பிறந்தனர். இப் பெண்ணுக்குக் **குந்தவ்வை** என்று (பாட்டியின்) பெயரிட்டனர். இராசராசனுக்கு இராசேந்திரன் என்ற மகனும் ஒரு பெண்ணும் பிறந்தனர். இராசராசன் தன் பாட்டியின் பெயரைத் தன் செல்வ மகளுக்கு இட்டுக் **குந்தவ்வை** என்று அழைத்தான்; அப்பாட்டியின் தமையனை தானார்ணவனது இரண்டாம் மகனை விமலாதித்தனுக்குத் தன் மகளை மணம் செய்வித்தான்.

இந்தச் சோழர்-சாளுக்கியரது உறவின் முறையால்தான் ‘குந்தவ்வை’ என்னும் ‘பெயர் தமிழரசன் மகளுக்குப் பெயராக அமைந்தது, தமிழ்க் கல்வெட்டுக்களில் இடம் பெற்றது என்பது கீழைச் சாளுக்கியர் வரலாற்றால் இனிதுணரப்படும்.

## குந்தவ்வை-பெயர்க் காரணம்

கீழைச்சாளுக்கியர், மேலைச் சாளுக்கியராகிய கன்னடர்க்கு உறவினர். மேலைச் சாளுக்கியர் நீண்ட காலமாகவே சமணப் பற்றுடையவர். சமணத்தில் **குந்தகுந்தாசாரியார்** என்ற சிறந்த ஆசாரியார் ஒருவர் இருந்தார். அவர் மிகச் சிறந்த கல்விமான்; பெரிய சமயப் பிரசாரகர். அப்பெரியார் நினைவாக ஆடவரும் பெண்டிரும் பெயர் வைத்துக் கொள்ளல் இயல்பேயன்றோ? சமயகுரவர், போற்றத்தக்க பிற பெரியார்கள், அரசர்கள் இவர்தம் பெயர்களை மக்கள் வைத்துக்கொள்ளல் யாண்டும்

புறமும் தட்டக்கூடிய ஒரு தோற்கருவி. இவர்கள் '**தம்பிராட்டி**' முதலிய பெயர்களைப் பெண்களுக்கு வழங்குகின்றனர்.

"கம்பர் என்னும் பட்டம் உடையவர் **உவச்சர்** என்றும், **உவச்சப்பிள்ளை** என்றும் அழைக்கப்படுகின்றனர்.

"ஸ்ரீவைகுண்டத்தில் உவச்சர் தெரு இருக்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்திலும், கன்னியாகுமரிப் பகுதியிலும் உவச்சர் வாழ்கின்றனர். சுந்தரராச **கம்பர்**, கோமதிக் **கம்பர்**, லேவணக் **கம்பர்**, கந்தக் **கம்பர்**, மாடசாமிக் **கம்பர்**, இலட்சுமணக் **கம்பர்** என உவச்சர் பெயர்கள் வழங்குகின்றன. கன்னியாகுமரியில் சுடலையாண்டிக் **கம்பர்** சிறந்த நாதசுர வித்துவானவர்.

"காளிகோவில் பூசாரிகளாக இருந்த உவச்சர் நாதசுரப் பயிற்சி பெற்று வாசிக்கின்றனர். இவர்கள் வேறு; இசை வேளாளர் வேறு. வேதம் ஓதிக்கொண்டிருந்த ஐயர் சங்கீத வித்துவானக இருப்பது போலக் காளிகோவில் பூசாரிகளாக இருந்த கம்பர் மரபினர், நாதசுர வித்துவான்களாக இருக்கின்றனர்.

"இக் கம்பர் மரபினர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் புலமை பெற்றிருந்தனர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அவ்வாறு புலமை பெற்றிருந்த சிலர் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்த சமீந்தார்களிடம் சிறப்புப் பெற்றனர்."

## கம்பர் உவச்ச மரபினர்

இவ்விவரங்களை நோக்க, கம்பர் என்பது இயற்பெயர் அன்று என்பதும், காளி கோவில் பூசாரிகளைக் குறித்து வந்த பொதுப் பெயர் என்பதும் தெளிவாகும். சோழ நாட்டுப் புலவர் 'சோழர்' என்று பெயர் பெற்றதில்லை;

சேரநாட்டுப் புலவர் 'சேரர்' என்றும் பெயர் பெற்றதில்லை. இவ்வாறே கம்பநாட்டுப் புலவர் 'கம்பர்' எனப் பெயர் பெறுதல் இயலாது. கம்பர் என்பது சுடலையாண்டிக் கம்பர், இராமையாக் கம்பர், முத்துக் கம்பர் என்றாற்போல ஓர் இனத்தவர்க்கு வழங்கும் பொதுப் பெயராகும். ஆகவே, சேக்கிழான்—இ ர ா ம தே வ ன் என்பவர் '**சேக்கிழார்**' என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டாற் போலவே, இராமாயணம் பாடிய ஆசிரியர் '**கம்பர்**' என்னும் பொதுப் பெயரால் அழைக்கப் பெற்றார் என்று கொள்ளுதல் தகும். கல்வியிற் சிறந்த உவச்சர் மரபைச் சேர்ந்த இராமாயண ஆசிரியர், அம்மரபுக்கு உரிய பட்டத்தால் அழைக்கப் பெற்றார் என்று கொள்வதே பொருத்தமானது. எனவே, கவிச்சக்கரவர்த்தி என்று போற்றப் பெறும் கம்பர் பெருமான் உவச்சர் மரபினர் என்று கொள்வது பொருத்தமேயாகும். அறிஞர் இதனை மேலும் ஆராய்வது நல்லது.

# 3. நாட்டுவளம்

## சங்க காலத்தில்

வடவேங்கடத்திலிருந்து குமரி முனைவரை பரவியுள்ள தமிழகத்தில் உள்ள மலைகள் எவை, அவை எங்கெங்கு இருக்கின்றன, அவற்றின் பெயர்கள் யாவை, அவற்றில் விளையும் பொருள்கள் எவை, தமிழகத்தில் பாயும் ஆறுகள் யாவை, அவை எங்குத் தோன்றி எவ்வெவ்வாறு பாய்கின்றன, அவற்றால் உண்டாகும் நலன்கள் யாவை, தமிழகத்தில் காடுகள் எங்கெங்கு இருக்கின்றன, காட்டில் வாழும் விலங்குகள் யாவை, அவற்றாலும் காடுகளாலும் மக்களுக்கு உண்டாகும் பலன்கள் யாவை, நாட்டில் நெல் விளையும் இடங்கள் எவை, பிற தானியங்கள் விளையும் இடங்கள் எவை, பண் படுத்தப்படாத இடங்கள் எவை, அவை அங்ஙனம் இருக்கக் காரணம் யாது என்பன போன்ற நாட்டுவளத்தை அறியத் தக்க செய்திகள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு சங்ககாலத் தமிழகத்தில் செய்யப்பட்டு வந்த கைத்தொழில்கள் யாவை என்பதும் சங்க நூல்களில் ஆங்காங்குக் குறிக்கப்பட்டுள்ளது. இங்ஙனமே பழங் காலத் தமிழகத்து உள் நாட்டு வாணிகம், கடல் வாணிகம் என்பன பற்றிய விவரங்களும் தமிழ் நூல்களில் காணப் படுகின்றன. பழந்தமிழர் இந்நாட்டுப் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு பர்மா, மலேயா, கிழக்

கிந்தியத் தீவுகள் முதலிய கிழக்கு நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தனர்; இவ்வாறே மேற்கு நாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்தனர்; பெரும் பொருள் திரட்டினர். பல நாட்டாருடனும் தொடர்புகொண்டு வாழ்ந்தனர். இங்ஙனம் கொண்ட உறவால், "யாதும் ஊரே. யாவரும் கேளிர்" என்னும் கருத்தை வலியுறுத்தினர்.

## சங்ககாலப் புலவர்

சங்ககாலப் புலவர் இயற்கைப் பொருள்களை நன்கு அறிந்தவர்; நாட்டிலுள்ள மலைகள், ஆறுகள், விளை பொருள்கள், செய் பொருள்கள், கடல் படு பொருள்கள் முதலியவற்றை நன்கு அறிந்திருந்தனர். கபிலர் என்ற புலவர் பெருமான் குறிஞ்சி நிலப் பூக்கள் பலவற்றின் பெயர்களைக் குறிஞ்சிப்பாட்டில் தெளிவாகக் கூறியுள்ளார். மான்களின் வகைகள் குறிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு விலங்கின் இயல்பையும் புலவர்கள் கவனித்துள்ளனர்.

மலையும் மலை சார்ந்த இடமும் **குறிஞ்சி** எனப் பெயர் பெற்றது; காடும் காடு சார்ந்த இடமும் **முல்லை** எனப் பட்டது; குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடையே ஒன்றும் விளையாத பொற்றல் நிலம் **பாலை** எனப்பட்டது; வயலும் வயல் சார்ந்த இடமும் **மருதம்** எனப் பெயர் பெற்றது; கடலும் கடல் சார்ந்த இடமும் **நெய்தல்** எனப் பெயர் பெற்றது. இந்த ஐவகை நிலங்களிலும் உள்ள விளை பொருள்கள், மக்கள்தொழில்கள், விலங்குகள், பறவைகள், அவற்றின் இயல்புகள் என்பன போன்றவை எல்லாம் சங்க நூல்களில் புலவர் பெருமக்களால் விவரமாகக் குறிக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான மரங்களின் பெயர்கள், செடி கொடிகளின் பெயர்கள் பழம் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

பீடு மிக்க மாட மதுரையின் கோட்டைச் சுவர்மீது வைக்கப்பட்டிருந்த போர்க் கருவிகளின் பெயர்கள் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இந்நாட்டிலிருந்து அயல் நாட்டிற்கு ஏற்றுமதியான பொருள்களும் இறக்குமதியான பொருள்களும் மதுரைக்காஞ்சி முதலிய பாக்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சி முதலிய ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்களின் உணவுப் பொருள்கள் இன்னவை என்று அறிவிக்கப்பட்டுள்ளன. மதுரை போன்ற பெரு நகரங்களில் இருந்த கடைகளில் விற்பனையான விளைபொருள்களும் செய்பொருள்களும் இன்னவை என்பது சிலப்பதிகாரம் முதலிய நூல்களால் தெளிவாகின்றன. இவை அனைத்தையும் பார்க்கும் பொழுது, தமிழ்நாட்டு இயற்கை வளத்தையும் செயற்கை வளத்தையும் மக்கள் நன்கு அறிந்து மகிழ இடமுண்டாகிறது.

இக்காலத்தில் ஆங்கில ஆட்சியால் நமது நாடு விஞ்ஞான வசதிகளைப் பெற்றுள்ளது ; உலக அறிவைப் பெற்றுள்ளது. இக்காலத்தில் தமிழ்நாட்டு மலைகள் மக்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றன, ஆறுகள் எவ்வாறு உதவுகின்றன, நாட்டின் விளைபொருள்கள் யாவை, செய் பொருள்கள் யாவை, இன்னும் எவ்வெத் துறைகளில் முயன்று நாட்டை வளப்படுத்தலாம், பாலைவனப் பகுதிகளை எவ்வாறு சோலைப்பகுதிகளாக மாற்றலாம் என்பன போன்ற விவரங்களை மக்கள் அறியத்தகும் முறையில் நூல்கள் வெளிவருதல் வேண்டும்.

## கோடைக்கானல்

கோடைக்கானல் மலைத்தொடரில் வாழைத்தோட்டங்கள் வளமாகப் பயிராகின்றன ; திராட்சை பயிராகின்றது; சில கிழங்கு வகைகள் பயிராகின்றன ; தைல மரங்கள் பயிராகின்றன ; தேக்கு கருங்காலி முதலிய உயர்ந்த மர

வகைகளும் பயிராகின்றன. இன்னும் பதப் படுத்தப் படாத இடங்கள் இவை இவை என்ற விவரங்கள் பொது மக்களுக்குத் தேவைப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு மலைத் தொடரைப் பற்றிய விவரங்கள் பைந்தமிழில் வெளி வருதல் வேண்டும். வேலையில்லாத மக்களை இத்தகைய மலைப் பகுதிகளில் குடியேற்றி நிலங்களைத் திருத்தி வாழச் செய்யலாம். இவ்வாறே தமிழகத்துக் காடுகள் இவை, இவற்றால் உண்டாகும் பயன்கள் இவை என்பன போன்ற விவரங்களையும் தமிழில் தருதல் வேண்டும். தமிழ் நாட்டில் இன்று விஞ்ஞான அறிவால் நடைபெறும் தொழில்கள் இவை என்ற விவரங்களும் தேவை.

## கல்வித் திட்டம்

தமிழ் நாட்டு மாணவர்க்கு எட்டாம் வகுப்பு வரையில் தமிழ் நாட்டு நிலநூல், வரலாறு, கைத்தொழில், பயிர்த் தொழில், போக்கு வரவு, ஏற்றுமதி இறக்குமதி, வாணிகம், சமுதாய நிலை முதலியவை பற்றிய அறிவை நன்கு வளர்க்கும் முறையில் புதிய பாடத் திட்டம் அமைய வேண்டும். ஒவ்வொரு தமிழ் மகனும் தன் நாட்டைப் பற்றிய எல்லா விவரங்களும் அறிந்துகொள்ளும் முறை யில் கல்வித் திட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதனை விடுத்து உலக நாடுகளைப் பற்றி அவன் அறிவு பெறுவதில் என்ன பயன் உண்டாகும்?

## முடிவுரை

தமிழ் மக்களுக்கு இன்றுள்ள நிலையில் நாட்டு வளத்தை அறிவிக்கும் முறைகளில் பொருட்காட்சியும் ஒன்றாகும். தமிழ் நாட்டு விளை பொருள்களும் செய் பொருள்களும், தமிழ் நாட்டுத் தொழில்களை வளப் படுத்தும் விஞ்ஞானக் கருவிகளும் இடம் பெறும். மக்கள் இவற்றைப் பார்த்து அறிவு பெறுதல் நல்லது.

# 4. நாட்டார் நற்பண்புகள்

## கல்வி கற்றல்

பேராசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் தஞ்சைக்கு எட்டுக்கல் தொலைவில் உள்ள நடுக்காவிரியில் வீரப்பழங்குடி மரபாகிய கள்ளர்* வகுப்பில் பிறந்தவர். கள்ளர் மரபினர் சோழரிடம் பல நூற்றாண்டுகளாகப் போர் வீரர்களாகவும் படைத்தலைவர்களாகவும் இருந்தனர். இத்தகைய சீரிய மரபினர் 90-க்கு மேற்பட்ட பட்டங்களைப் பெற்றனர். 'களத்தில் வென்றார்,' 'வாண்டையார்', 'தேவர்', 'இடங்காப் பிறந்தார்', 'சேதிராயர்', 'நாட்டார்', என்பன அப்பட்டங்களுள் சிலவாம்.

---

*கள்+தல் (கட்டல்)—பறித்தல் ; கள்ளன்—பறிப்பவன்; கள்ள அறை-பிறர் அறியமுடியாதபடி அமைந்துள்ள அறை ; பெட்டிமுதலியவற்றில் பிறர் அறியாவகை அமைக்கப்படும் அறை. (Lexicon, vol, 2, p. *806, 808)* எனவே, **கள்ளன்**—பிறர் அறியாவகையில் அவரைப்பற்றிய உண்மைகளை அறிபவன் (அறிந்து அரசாங்கத்திடம் தெரிவிப்பவன்). C. I. D, ஒற்றன் எனப் பொருள்கொள்வது பொருத்தமாகும். தமிழரசரிடம் இருந்த 'ஒற்றர்' என்ற அரசாங்க அலுவலரே **கள்ளர்** எனப்பட்டனர் என்று கொள்வதே பொருத்தமாகும். இக்கருத்தை எனக்கு அறிவித்த ஆராய்ச்சி அறிஞர் மதுரை மீனாட்சி ஆலை இயக்குநர் திரு. **கருமுத்து-தி. மாணிக்கவாசகனார்**, பி. ஏ. ஆவர்,

பழந்தமிழ்ப் பெருங்குடியில் பிறந்த நாட்டார் இளமையில் தந்தையாரிடமே தமிழ்க்கல்வி பயின்றார். 'சாவித்திரி வெண்பா' பாடிய சாமிநாத முதலியார் என்பவர் யோசனைப்படி மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தி வந்த பிரவேச பண்டிதர் தேர்வுக்குப் படிக்கலானார்; அச்சிட்ட நூல்கள் கிடைக்காமையால் பலவற்றை எழுதிப் படித்தார்; அத்தேர்வில் முதல்வராகத் தேறினார். பின்னர் அவர் மேலும் முயன்று பால பண்டிதத் தேர்விலும் சிறப்புறத் தேறினார்; இறுதியில் பண்டிதத் தேர்விலும் முதல்வராகத் தேறி அதற்குரிய தங்கத் தோடாவைப் பரிசாகப் பெற்றார்.

## அலுவல்

பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், கோவை மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார்; சில ஆண்டுகளுக்குப் பிறகு திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்தார். அங்கு ஏறத்தாழ 25 ஆண்டுகள் பணியாற்றினார்; பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்றார்; பின்பு கரந்தைப் புலவர் கல்லூரியின் தலைவராக இருந்தார்; 1944-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

## நூலாசிரியர்

இப் பெரியார் ஏறத்தாழ 40 ஆண்டுகள் தமிழ் உலகம் போற்ற வாழ்ந்தார். அக் காலத்தில் இவர் ஆராய்ந்து எழுதிய நூல்கள்பல. அவற்றுள் **கள்ளர் சரித்திரம், சோழர் சரித்திரம், நக்கீரர், கபிலர், வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி, கட்டுரைத் தொகுதி இரண்டு**

**பாகங்கள்** என்பன குறிப்பிடத்தக்கவை. இவை இவருடைய நுணுகிய ஆராய்ச்சித் திறனை நன்கு விளக்க வல்லவை.

## உரையாசிரியர்

சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை முடிவுற்றதாக இல்லை. அக் குறையை நீக்க விழைந்த நாட்டார், சிலப்பதிகாரம் முழுமைக்கும் சிறந்த முறையில் தெளிவுரை எழுதி வெளியிட்டார். இவ்வாறே **அகநானூற்றுக்கும்**, கரந்தைக் கவியரசு அவர்களுடன் சேர்ந்து நல்ல உரையை வெளியிட்டார்; **மணிமேகலைக்**கும் ஆழ்ந்து அகன்ற உரையை வெளியிட்டார். இவ்வுரை எழுதுவதில் இவருக்கு உதவியாக இருந்தவர் பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள். நாட்டார் எழுதிய **திருவிளையாடற் புராணவுரை** படித்துப் படித்து இன்புறத்தக்கது. இவ்வாறு இப் பெரும் புலவர் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றுக்கும் உரை எழுதியுள்ளார். இவரது உரை இவருடைய ஆழ்ந்த கல்வி அறிவையும் ஆராய்ச்சித் திறனையும் நன்கு புலப்படுத்துகின்றது.

## பேராசிரியர்

பேராசிரியர் நாட்டார் செய்யுட்களை இசையுடன் பாடிப் பொருள் விரிப்பதில் சிறந்தவர். அவருடைய வகுப்பில் மாணவர் அமைதியாக இருந்து பாடம் கேட்பது வழக்கம். டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் போன்ற தமிழ்ப் பேராசிரியர் பலரும், கல்லூரித்தலைவர் பலரும், அரசாங்க உயர் அலுவலர் பலரும் தாம் நாட்டார் மாணவர் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றனர் என்றால், இப் புலவர் பெருமானது புலமைத் திறனை என்னென்று பாராட்டுவது !

## சொற்பொழிவாளர்

நாட்டார் அவர்கள் ஏறத்தாழ 30 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் தமிழ்ச் சங்கங்களிலும் தமிழ் மாநாடுகளிலும் சைவ சமயத் தொடர்பான கழகங்களிலும் ஆற்றிய சொற்பொழிவுகள் மிகப்பல. அவை இவர்தம் ஆழ்ந்து அகன்ற தமிழ் அறிவையும், சமயநூற் புலமையையும் நன்கு விளக்கவல்லன ; கரந்தைத் தமிழ்ப் பொழிலிலும், செந்தமிழ்ச் செல்வியிலும் வெளிவந்துள்ளன. திரிசிரபுரம் சைவ சிந்தாந்த சபையில் இவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகள் எண்ணிறந்தன. அப்பெரும் நகரத்தில் இன்று சிலரேனும் சைவ உணர்ச்சியுடன் இருப்பதற்கு நாட்டார் அவர்கள் சமயத் தொண்டே சிறந்த அடிப்படை என்னல் தவறுகாது.

## குடும்பம்

நாட்டார் திருமகளார் பார்வதி அம்மையார் வித்துவான் பட்டம் பெற்றவர். நாட்டார் மருகர் இருவரும் தமிழ் ஆசிரியர்கள். பேரன்மார் தமிழ் ஆனர்ஸ் படித்தவர்கள். தம்பி கோவிந்தராய நாட்டார் சிறந்த தமிழ் அறிஞர். இங்ஙனம் இப் புலவர் பெருமானரது குடும்பத்தார் அனைவரும் தமிழன்னையின் தவப்புதல்வராக இருத்தல் பாராட்டத்தக்கதன்றோ ?

## நற்பண்புகள்

இப் பெரியார் சீரிய ஒழுக்கம் உடையவர்; ஒழுக்கத்தின் அவதாரம் எனக் கூறலாம்; உழைப்பால் உயர்ந்த பெரியவர் ; தம்மீது பொறாமைப்பட்டோரையும் அன்பினால் அணைத்த உத்தமர். இப்பெரியாருடன் ஏறத்தாழப் பத்து ஆண்டுக்காலம் யான் நெருங்கிப் பழகியவன். புறங்கூறுதல் இவர்பால் யான் கண்டதில்லை. இவர்

எளிய செந்தமிழ் நடையில் பேசும் வன்மை படைத்தவர்; சைவ சமயத்தில் அழுத்தமான பற்று உடையவர்; **தமிழர்—தமிழ்—தமிழ்நாடு** இம்மூன்றின் நலத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்தவர். இப் பெருமானுடைய நற்பண்புகளைப் பின்பற்றி வாழ்தலே உண்மைத் தமிழர்கள் கடமையாகும். இப்பேராசிரியர் புகழ் தமிழ் உள்ளவரை நின்று நிலவும் என்பது உறுதி. இவரது நினைவு நாளை ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாடுதல் நல்லது.

# 5. பிள்ளை வளர்ப்பு

## முன்னுரை

"நூலைப்போல் சீலை, தாயைப்போல் பிள்ளை" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. நூல் முருடாக இருப்பின் அதனால் நெய்யப்படும் ஆடையும் முருடாகவே இருக்கும். நூல் மென்மையாக இருப்பின், ஆடையும் மென்மையாக அமையும். கடையில் ஆடையைப் பார்க்கும் நாம், அதற்குரிய நூலின் எண் என்ன என்று கேட்கின்றோம் அல்லவா? ஆடையைக் கொண்டு நூலை விசாரித்து அறிவதுபோல, நாம் பிள்ளைகளின் செயல்களைக் கொண்டு பெற்றோரை அறிகின்றோம்.

நூலுக்கு ஏற்ப ஆடை அமையும்; இதை மாற்ற இயலாது. ஆனால், பெற்றோர் நிலைக்கு ஏற்பப் பிள்ளைகள் வளர்ந்தாலும், அவர்களை நல்லவர்கள் ஆக்கவும், கெட்டவர்கள் ஆக்கவும் அப்பெற்றோர்களின் பண்புகளோடு சூழ்நிலையும் சேர்ந்து கொள்கிறது. ஆடை அமைப்பில் நூலே சிறப்பிடம் பெறுகிறது. பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் இயல்புகளும் சூழ்நிலையும் சிறப்பிடம் பெறுகின்றன.

## பலவகைப் பெற்றோர்

தாயும் படித்தவள்; தந்தையும் படித்தவர். அந்த இருவரும் மனமொத்த அன்பு வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்கள் வீட்டில் நல்ல புத்தகங்கள் நிறைந்திருக்

கின்றன. கணவனும் மனைவியும் பூசலிடுவதில்லை. அவர்களிடையே பிறந்து வளரும் பிள்ளை எப்படி இருக்கும்? நல்ல முறையில் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளரும் அல்லவா? அதே பிள்ளை பள்ளிக்குச் செல்லும் போது பல திறப்பட்ட பிள்ளைகளோடு பழக வாய்ப்பு உண்டாகிறது. அப்பிள்ளைகளுள் சிலர் நல்லவராக இருக்கலாம்; பலர் தீய பழக்க வழக்கங்களை உடையவராக இருக்கலாம். பெற்றோர் மிகுந்த கவலை எடுத்துக்கொண்டு தம் பிள்ளை நல்ல மாணவரோடு பழகவே இடந்தருவர். இத்தகைய சூழ்நிலை அமைப்பால், பிள்ளை நன்னெறியிலேயே வளர இடம் உண்டாகிறது.

ஒரு தந்தை குடிகாரன். அவன் ஓயாது மனைவியை அடித்துத் துன்புறுத்துகிறான்; தீய சொற்களைப் பயன்படுத்துகிறான். தாயும் கணவனைக் கண்டவாறு வைகிறாள். இந்தக் குடும்பத்தில் வளரும் பிள்ளை பெற்றோர்களது பாதுகாப்பை இழக்கிறது. இளஞ் செடிக்கு ஏற்ற எரு இட்டு உரிய காலத்தில் தண்ணீர் விட்டு நல்ல காற்றும் வெளிச்சமும் உள்ள இடத்தில் வைத்தால்தான், அது நன்கு வளர முடியும். அது போன்றதே பிள்ளை வளர்ப்பும். பிள்ளைப் பருவத்திற்கேற்ற குடும்ப நிலையும் சூழ்நிலையும் அமையவேண்டும். நாள்தோறும் வீட்டில் தன் பெற்றோரே ஒருவரை ஒருவர் வைதுகொண்டு சண்டை இட்டுக்கொள்ளுதல், பிள்ளையின் அறிவையும் வளர்ச்சியையும் மிகுதியாகத் தாக்கிவிடும். அந்த நிலையில் அப் பிள்ளை தீய பிள்ளைகளுடன் சேர்ந்தால், எளிதில் கெட்டு விடுதல் இயற்கை.

தந்தை மட்டும் படித்தவன்; தாய் படியாதவள். தந்தை பிள்ளையைக் கண்டித்து நன்முறையில் வளர்க்க எண்ணுகிறான். தாய் தன் அறியாமையினால் பிள்ளைக்குச் செல்லம் கொடுக்கிறாள். தாயின் செல்லத்தால் பிள்ளை

நாளடைவில் கெட்டுப்போய் விடுகிறான். இவ்வாறு குடும்பத்தில் கெட்டு வளரும் பிள்ளை சூழ்நிலையாலும் கெட்டுவிடுகிறான்.

பெற்றோர் படியாதவர்; ஆனால், நல்ல ஒழுக்கமுடையவர்; பிள்ளையை அன்போடு வளர்க்கின்றனர்; பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். பிள்ளை தீய மாணவருடன் பழகுகின்றான்; அவர்கள் தூண்டுதலால் வீட்டிலுள்ள பணத்தைத் திருடுகிறான். இவ்வாறு அவன் சிறு சிறு குற்றங்களைச் செய்து, நாளடைவில் பெரிய குற்றவாளி ஆகிறான்.

பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் பங்கு முக்காற் பங்காகும். பிள்ளையை வீட்டில் நன்கு வளர்ப்பதும் வெளியில் நல்ல சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தலும் பெற்றோர் கடமையாகும். இந்த இரண்டில் எது தவறினாலும், பிள்ளை வளர்ப்புக் குறைவுடையதாகும்.

## பெற்றோர் நிலைமை

நமது நாட்டில் பெற்றோருள் பெரும்பாலர் கல்வியறிவு இல்லாதவர்கள்; மிகுந்த ஏழைகள்; வசதியற்ற குறுகிய இல்லங்களில் வாழ்பவர்கள். இத்தகையோர் கூடிவாழும் இடமும் பலவசதிகள் அற்றதாக இருக்கின்றது. போதிய கல்வி அறிவும் நாகரிகப் பழக்க வழக்கங்களும் இல்லாமையால், அம்மக்களிடம் நல்ல பேச்சு வார்த்தைகள் மிகுதியாக இல்லை; தீய சொற்களை —பலர் முன் கூறத்தகாதவற்றை—எளிதாகப் பேசுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் வளரும் பிள்ளைகளும் இளமை முதலே இச்சொற்களைப் பேசுவதைக் கேட்கின்றனர். சமுதாயத்தில் சான்றோர்கள் இருந்து இம்மக்களைச் செம்மைப் படுத்தாமையால், இவர்கள் வாழையடிவாழையாக இப்படியே பேசியும் வீண் சண்டை

சச்சரவுகளை வளர்த்தும் வருகின்றனர். சூதாடுதல் முதலிய தீய பழக்கங்களும் இவர்களிடம் இருக்கின்றன. இச் சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் கெட்டுத் திரிவது இயற்கையாகிவிட்டது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" ஆதலால், இளமையில் உண்டாகும் இத்தீய பழக்க வழக்கங்கள் வயது ஏற ஏற முறுக்கேறுகின்றன.

## பிள்ளை வளர்ப்பு ஒரு கலை

பிள்ளை வளர்ப்பு ஒரு கலையாகும். சமுதாய நலத் திட்டத்தில் இக்கலையைப்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அறிஞர்களை நியமிக்கவேண்டும். அவர்கள் ஊர் ஊராகச் சென்று பொதுமக்களுக்கு இக்கலை அறிவை ஊட்டவேண்டும். வாழ்க்கைக்குத் தேவை அற்ற பல செய்திகளைப் பொது மக்களிடம் பேசும் பேச்சாளர்கள், பிள்ளை வளர்ப்புக் கலையைப்பற்றி அறிந்து அதைப் பொதுமக்களுக்கு ஊட்டவேண்டும். நாட்டிலுள்ள நல்லவர்களும் சன்மார்க்க சங்கங்களும் அரசினரும் இத்துறையில் மிக்க ஊக்கம் காட்டவேண்டும். சமுதாயத்தில் உண்மையான பற்றுக்கொண்ட ஊழியர்கள் இத்துறையில் இறங்கி வேலை செய்யவேண்டும். இன்றுள்ள அவலநிலை உண்மையாக மாறவேண்டுமானல், இந்த முறையில் அனைவரும் பாடுபடவேண்டும். இங்ஙனம் உழைக்காமல் குற்றம் புரியும் சிறுவர்க்கு இரண்டொரு பள்ளிகள்மட்டும் வைத்துவிடுதல் போதாது; அவற்றுக்குப் பொதுமக்களோ அரசாங்கமோ மானியம் வழங்கிவிடுதல்மட்டும் போதாது.

## முடிவுரை

இன்று சிறுவராக இருப்பவரே எதிர்காலச் சமுதாய மக்கள்; இந்நாட்டு மன்னர். ஆதலால் அவர்கள் நல்ல ஒழுக்கம் உடைய நன்மக்களாக இருந்தால்தான் எதிர்

காலச் சமுதாயம் சிறந்து விளங்கும். சமுதாயம் நல்ல நிலையில் இருந்தால்தான் நாட்டில் அமைதி நிலவும்; மக்கள் மக்களாக வாழமுடியும்; அரசியலும் பயனுடைய அரசியலாகும்; இந்த உயிர் நாடியை நன்மக்களும் அரசாங்கமும் கவனித்து, விரைவில் ஆவன செய்தல் வேண்டும்; சிறுவர் உலகம் சீரடையச் செய்தல்வேண்டும்.

# 6. ஒழுக்கக் கல்வி

## சமயக் கல்வி

நம் நாட்டுத் தொடக்க நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி இவற்றில் சமயக்கல்வி கற்பிக்கப்படல் வேண்டும் என்று ஒரு சிலர் கூறிவருகின்றனர். அக்கல்வி போதிக்கப்படின், மாணவர் ஒழுக்கம் வளரப்பெற்று நன்மக்களாக விளங்குவர் என்று அச்சிலர் கருதுகின்றனர். ஆயின், திட்டமாக இன்னமுறையில் அச்சமயக் கல்வி அமையவேண்டும், இன்னின்ன பொருள் பற்றிய பாடங்கள் அப்பாடத் திட்டத்தில் இடம் பெறுதல் வேண்டும் என்று தெளிவாகக் கூறினோர் எவருமில்லை.

கிறித்துவப் பள்ளிகளில் சமயபோதனை நடப்பதைப் போலப் பிற சமயத்தார் பள்ளிகளிலும், சமய போதனை நடைபெறவேண்டும் என்று இருபது ஆண்டுகட்கு முன் ஒரு கிளர்ச்சி நடந்தது. அதன் பயனாக இந்துக்கள் நடத்தும் பள்ளிகளில் சமய அறிவு பரப்பப்பட்டது. இப் பாடத்திற்கென்று அமைந்த நூல்களுள் **ஆரிய மத உபாக்கியாநம், ஆஸ்திக மத உபாக்கியாநம்** என்பன குறிப்பிடத் தக்கவை. இந்நூல்களில் அமைந்த பாடங்கள் விதுரன் வில்லை ஒடித்தது, பரசுராமன் கர்வ பங்கம், திரௌபதி ஐவரை மணந்தது முதலியனவாகும். இப்பாடங்கள் எவ்வாறு சமய போதனையை வளர்க்க வல்லவை? ஆரிய மத உபாக்கியாநம் என்ற நூலைத் தமிழர் பார்த்ததும், "அது நமக்குத் தேவையில்லை; தமிழர்

சமயம் பற்றிய உண்மைகளே நமக்குத் தேவை" என்று கூறிக் கிளர்ச்சி செய்தனர். அதன் பயனாகவும் பிற காரணங்களாலும் பள்ளிகளில் சமய போதனை கைவிடப் பட்டது.

சமயம் என்றவுடன் இந்துக்கள் உள்ளத்தில் இராமாயண பாரதக் கதைகள்தாம் நினைவுக்கு வருகின்றன. 'இக் கதைகள் உண்மைச் சமயத்தை வளர்க்கத் தக்கவையா? உண்மைச் சமயம் என்பது யாது? அச் சமயக் கொள்கைகள் யாவை? அவற்றிற்கும் இக்கதைகளுக்கும் என்ன தொடர்பு உண்டு?' என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணவேண்டுமல்லவா? இக்கதைகள், இந்துக்களிடையே பலருக்குப் பொருத்தமாகக் காணப்படவில்லை. பிறசமய மாணவரும் இவற்றை விரும்பிப் படிப்பது அரிது. இக்கதைகள் பல நூற்றாண்டுகட்கு முன் இருந்த சூழ்நிலைக்கு ஏற்ப எழுந்தவை. இக்கதைகள் நம் நாட்டின் பண்டைய நிலையை விளக்குவன என்ற அளவில் பயன்படத் தக்கவையே தவிர, இன்றைய வாழ்க்கையில் மிகுந்த பயனைத் தரத்தக்கன அல்ல. கடவுள் தொடர்பான கதைகளால் மனித முயற்சியிலும் உழைப்பிலும் பிள்ளைகட்கு நம்பிக்கை ஏற்படுவது அரிதாகும். இதனால் தன் முயற்சி தாழும்; உழைப்பில் ஊக்கம் செல்லாது.

"இராமாயண வரலாறு, வடநாட்டார் தென்னாட்டார் மீது ஆதிக்கம் கொண்டதை உணர்த்துவது," என்று புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர்களும் பண்டித நேரு போன்ற அரசியல் அறிஞர்களும் எழுதியும் பேசியும் வந்த காரணத்தால், இராமாயண வரலாறு பற்றித் தமிழகத்தில் பலத்த எதிர்ப்பு இருந்து வருகின்றது. கற்றவரும் மற்றவரும் இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்து வருகின்றனர். இராமாயணம், பாரதம் போன்ற வரலாறுகள் எவ்வாறோ, யாராலோ, எக்காலத்திலோ சமயத் தொடர்புடையன

வாகக் கருதப்பட்டுவிட்டன. இராமாயணம் சூரியகுல அரசனைப் பற்றிய வரலாறு, பாரதம் சந்திரகுல அரசர் களைப் பற்றிய வரலாறு என்று நூல்கள் கூறுகின்றன. அரசர்குல வரலாறுகளை வரலாற்று முறையில் படிப்பதே பொருந்தும். இவ்வரலாறுகளில் கடவுளரைப் புகுத்திச் சமய நூல்களாகச் செய்துவிட்டமை, இடைக்காலத்தில் நேர்ந்த தவறு. இதுவே வரலாற்று ஆசிரியர்கள் கூறும் கருத்தாகும். அறிவும் ஆராய்ச்சியும் போதிய அளவு வளர்ச்சி பெறுத நமது நாட்டில், வரலாறு எது, சமயம் எது, என்பதைப் படித்தவர் பலரும் புரிந்துகொள்ளா திருத்தல் நாடு செய்த தவக் குறையேயாகும்.

## ஒழுக்கக் கல்வி

மனிதன் இவ்வுலகத்தினையும், இதனில் தோன்றும் சுடுகதிரையும், தண்மதியையும், விண்மீன்களையும் பிறவற்றையும் படைக்கும் ஆற்றல் வாய்ந்த ஒன்று இருத்தல் வேண்டும் என்று நினைப்பது இயல்பு. அந்த ஒன்றுக்கு அவன் மரியாதை செய்தலும், நன்றி செலுத் துதலும் இயல்பு. மனிதன் சமுதாயத்தில் ஒருவனுக இருந்து நேர்மையான முறையில் வாழ்க்கை நடத்துதல் வேண்டும். அதற்கு வேண்டுவன **கல்வி, அன்பு, உண்மையுடைமை, ஒழுக்கமுடைமை, உழைப் புடைமை,** முயற்சியுடைமை முதலியன. இவற்றை நன்ருக வரையறுத்துக்கொண்டு, ஒவ்வொன்றையும் விளக்கிக்கூறும் முறையில் உலகப்பெரியார் வரலாறுகளி லிருந்து மேற்கோள்களைக் காட்டி நூல்களை வரைதல் நல்லது. அந்நூல்களைப் பாடமாக வைத்தல், மாணவ னுடைய அறிவினையும் ஒழுக்கத்தினையும் பயன்படுத்தப் பெருந்துணை செய்யும்.

"வைரத்தை வைரத்தால்தான் அறுக்கவேண்டும்" என்பதுபோல, மனித வாழ்வு செம்மைப்பட, மனித வரலாறுகளே மாணவர்க்குக் கற்பிக்கப்படல் வேண்டும். சான்ருக, ஆபிரகாம் லிங்கன் வரலாற்றை எடுத்துக் கொள்வோம். எளிய குடிசையில் எளிய பெற்ருேர்க்குப் பிறந்த ஆபிரகாம் லிங்கன் எவ்வாறு தமது சொந்த உழைப்பிஞல் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்தார்—அமெரிக்கக் குடியரசின் தலேவராஞர்—அவரிடம் காணப் பட்ட உயர்குணங்கள் யாவை என்பனவற்றை அவரது வரலாறு நன்கு விளக்குகின்றது. இவ்வரலாற்றைப் படிக்கும் மாணவனது உள்ளம், உண்மையில் கிளர்ச்சி யடையும் அல்லவா? உழைத்தால் உயரலாம்—நாட்டை ஆளும் தலேவஞக வரலாம்—மக்களுக்கு நலங்கள் பல செய்யலாம் என்ற எண்ணங்கள் அவர் உள்ளத்தில் தோன்றி வளர, இவ் வரலாறு பெருந்துணே செய்கின்ற தன்ருே!

இவ்வாறே நாகரிக முன்னேற்றத்திற்கு வழிகாட்டி களாக உள்ள விஞ்ஞானிகளுடைய வரலாறுகளும், சமயத் தலேவர்களின் அறிவுரைகளும் மாணவர்களின் அறிவை யும் ஒழுக்கத்தையும் நன்முறையில் வளர்ப்பனவாகும். விவேகாநந்தர், இராமலிங்க அடிகள் போன்ற உண்மைச் சமயவாதிகளின் அறிவுரைகள் தெளிவாக மாணவர் படிக்கத்தக்க முறையில் நூல்களாக வெளியிடுதல் வேண்டும். சாதி சமய வேறுபாடற்ற நல்ல சமயம் உரு வாக வேண்டுமாஞல், **மனிதர் வரலாறுகளே மனித னுக்குத் தேவை.** மனிதனது வரலாறு மனிதனது வாழ்க் கையைச் செம்மைப் படுத்துவது போல, மனித ஆற்ற லுக்கு அப்பாற்பட்ட தெய்வத் தொடர்பான வரலாறுகள் இளம் உள்ளங்களேச் செம்மைப்படுத்தும் ஆற்றல் பெற்றவை ஆகா என்று கூறுதல் தவருகாது. மாணவப்

பருவம் நீங்கிய பிறகு உளதாகும் வாழ்க்கைப் பருவத்தில் அவரவர் சமய நூல்களைப் படித்து மகிழ்ச்சி பெறட்டும்; அதனால் உண்டாகும் பயனை அடையட்டும். **சமயம் என்பது தனி மனிதன் உரிமை.** அதனைத் தடுக்கவோ, கெடுக்கவோ பிற மனிதனுக்கு உரிமையில்லை.

## முடிவுரை

உழைப்பால் உயர்வு பெற்ற பெரியோர், புதியன கண்ட பேரறிஞர்கள், தாய் நாட்டைக் காத்த வீரர்கள், பிறர்க்கே உழைத்த பெருமக்கள், சன்மார்க்கத்தில் வாழ்ந்த அருளாளர்கள் ஆகிய பெருமக்களுடைய விவரமான வாழ்க்கை வரலாறுகளும் அவர்தம் அருளுரைகளும் கொண்ட நூல்களே இக்கால மாணவர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் அமைந்து, அவர்களை உலகில் வாழ்வாங்கு வாழச்செய்ய வல்லவை. இவ் வரலாறுகள் ஒழுக்கத்தையும், சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. இவை வளர்க்கும் ஒழுக்க அறிவும், சமய அறிவும் மாணவ நிலைக்குப் போதுமானவை. அறிவிற் சிறந்த கல்வித் துறையினர் இத்துறையில் கவனஞ் செலுத்துதல் நலம்.

# 7. சௌராஷ்டிரர்*

## சொந்த நாடு

தமிழகத்தில் பெங்களூர், வடஆற்காடு, தஞ்சை மாவட்டம், மதுரை, இராமநாதபுர மாவட்டங்கள் இவற்றில் வாழ்ந்துவரும் சௌராஷ்டிரர் கத்தியவார் என்று சொல்லப்படும் சௌராஷ்டிர நாட்டைச் சேர்ந்தவர். இவர்களின் முன்னோர் கத்தியவாரில் பட்டுநூல் நெசவு செய்து வந்தவர்.

## புதிய ஊர்

இவருள் ஒரு பகுதியினர் மேற்கு மாளுவ நாட்டில் உள்ள 'மந்தசோர்' என்னும் நகரத்திற்குக் குடியேறினர். கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமாரகுப்தன் என்ற குப்த மன்னன் விருப்பப்படி மேற்கு மாளுவ நாட்டிலுள்ள மந்தசோர் என்ற நகரத்தில் சௌராஷ்டிரர் சிலர் குடியேறினர் என்று அந்நகரிலுள்ள கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவர்தம் பட்டுநெசவு பற்றிய புகழ்மாலை இக் கல்வெட்டில் விரிவாகக் காணப்படுகிறது. மந்தசோர் நகரம் எழில் மிகுந்த மங்கையாகவும், சௌராஷ்டிரர் அம்மங்கை அணியும் பட்டாடையாகவும் அக்கல்வெட்டில்

---

* தர்ஸ்டன் எழுதிய "தென் இந்தியச் சாதிகளும் இனங்களும்", "மதுரை மான்யுவல்", "மதுரை கெசட்டியர்" என்னும் நூல்களின் துணையைக் கொண்டு இஃது எழுதப்பட்டது.

புனைந்துரைக்கப்பட்டுள்ளன. சௌராஷ்டிரர் அக்கல் வெட்டில் 'பட்டவாயகர்' என்று குறிக்கப்பட்டுள்ளனர். இதன் நேரான தமிழ்ப் பெயர் 'பட்டுநூல்காரர்' என்பது.

## தேவகிரியில்

மந்தசோர் நகரம் முஸ்லிம்களின் படையெடுப்பினால் அழிந்தபோது, இச் சௌராஷ்டிரர் தெற்கு நோக்கிப் பயணமாயினர். அப்பொழுது இன்றைய பம்பாய் மாகாணத்தின் வடபகுதியையும், வட ஐதராபாத் சீமையையும் யாதவர் என்னும் அரச மரபினர் ஆண்டுவந்தனர். அவர்தம் தலைநகர் **தேவகிரி**. அதுவே இக்கால தௌலதாபாத் என்பது. கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்–காபூர் விந்தியமலைக்குத் தென்பால் படையெடுத்தபோது முதலில் தாக்குண்ட நகரம் தேவகிரிதான். அங்கிருந்த சௌராஷ்டிரர் மீண்டும் தெற்கு நோக்கிச் சென்று விசய நகரத்திற் குடியேறினர்.

## மீண்டும் தெற்கு நோக்கி

மாலிக்-காபூர் படையெடுப்புக்குப் பிறகு விசய நகரப் பேரரசு அமைக்கப்பட்டது. அஃது ஏறத்தாழ 200 ஆண்டுகள் வளமாக இருந்தது. தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு அப்பேரரசு அழிவுற்றது; விசய நகரம் முஸ்லிம்களால் அழிக்கப்பட்டது. மக்கள் தெற்கு நோக்கி ஓடினர். அங்ஙனம் ஓடியவருள் மேலே சொல்லப்பட்ட சௌராஷ்டிரரும் இருந்தனர். அவர்கள் வட ஆற்காடு, சேலம், பெங்களூர், மதுரை முதலிய இடங்களில் சென்று தங்கினர். எனவே, ஏறத்தாழ 16 அல்லது 17-ஆம் நூற்றாண்டில் இவர்கள் தமிழகத்திற்கு வந்தனராதல் வேண்டும்.

## திருமணத்தில் கேள்விகள்

இங்ஙனம் சௌராஷ்டிரர் சௌராஷ்டிர நாட்டிலிருந்து தேவகிரிக்கும், பின்னர் விசய நகரத்திற்கும், அதன் பின்னர் மதுரை முதலிய இடங்களுக்கும் வந்தவர் என்பதை, அவர்கள் திருமணச் சடங்குகளுக்கு முன் கூறி விடுகின்றனர். பெண் பேசப்போகும் மணமகன் வீட்டாரைப் பெண் வீட்டார், 'நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று கேட்கின்றனர். மணமகன் வீட்டார், 'நாங்கள் சேரரத்தைச் சேர்ந்தவர். சேரரத்—சௌராஷ்டிரா அல்லது கத்தியவாரின் பழைய பெயர்; தேவகிரியில் தங்கி வாழ்ந்தோம்; பின்னர் விசய நகரத்துக்கு வந்தோம்; அதன் பின்னரே மதுரை முதலிய இடங்களுக்கு வந்தோம்' என்று விடை கூறுவர். இவ் விடைக்குப் பிறகு மணமகன் வீட்டார் பெண் வீட்டாரை முன் சொன்னபடியே கேட்பர். அவர்களும் மேற்சொன்னவாறே விடையளிப்பர்.

## பிற சான்றுகள்

கி. பி. 1872-இல் சேலத்தில் மராத்தி மொழியில் தயாரிக்கப்பட்ட கையெழுத்து நூலில் இதே வரலாறு கூறப்பட்டுள்ளது. விசய நகரப் பேரரசின் காலத்தில் அந்நகரம் பட்டாடைகளுக்குப் பெயர் பெற்றிருந்தது என்பது வரலாறு. தமிழகத்திலுள்ள சௌராஷ்டிரர்களில் பலரும் இன்றளவும் நல்ல முறையில் தெலுங்கு பேசுவதைக் காணலாம். அவர்தம் மொழியில் தெலுங்குச் சொற்களும், கன்னடச் சொற்களும் காணப்படுகின்றன; பெல்லாரி மாவட்டத்திற்குச் சிறப்புடையதான பசவர் விருந்தினை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். இவையனைத்தையும் நோக்க, சௌராஷ்டிரர் நீண்ட காலம்

தெலுங்கு நாட்டில் தங்கியிருந்திருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

## தமிழகத்தில் பல இடங்களில்

விசய நகர வீழ்ச்சிக்குப் பிறகு சௌராஷ்டிரர்களில் ஒரு பகுதியினர் பெங்களூரில் குடியேறினர். அவர்கள் 'பட்வேகர்' என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களால் நெய்யப்பட்ட பட்டாடைகள் ஹைதர் அலி காலத்தில் போற்றப்பட்டனவாம். ஹைதர் அலி தஞ்சை மாவட்டத்திலிருந்து 25 சௌராஷ்டிரக் குடும்பங்களை மைசூர் நாட்டில் குடியேற்றினர் என்பதும், ஸ்ரீரங்கப் பட்டினத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு பட்டுத் தொழில் வீழ்ச்சியடைந்தது என்பதும் 1891-ஆம் ஆண்டில் வெளியான மைசூர் மக்கள் அறிக்கையில் காணப்படுகின்றன.

## மதுரையில்

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களின் தூண்டுதலால் சௌராஷ்டிரர் மதுரையில் குடியேறினர் என்று செவிவழிச் செய்தி கூறுகிறது. மதுரையிலுள்ள சௌராஷ்டிரர் உழைப்பும் திறமையும் மிக்கவர். பலர் செல்வராக இருக்கின்றனர்; தமிழ் நாட்டின் மற்ற மக்களிடமிருந்து விலகித் தனித்தே வாழ்கின்றனர்; வீட்டில் தங்கள் மொழியையே பேசுகின்றனர்; தங்கள் நாட்டின் பழக்க வழக்கங்களை இன்றளவும் கைக்கொண்டுள்ளனர். சிறிது வெள்ளை கலந்த மஞ்சள் நிறமுடைய இம்மக்கள் தமிழகத்தின் சில நகரங்களில் காணப்படுகின்றனர்.

கி. பி. 1705-இல் **மங்கம்மாள்** மதுரையை ஆண்டு வந்தாள். அப்பொழுது சௌராஷ்டிரர் பிராமணர் முறையில் பூணூல் அணிதலை மேற்கொண்டனர். இது குற்றமென்று கருதப்பட்டு 18 சௌராஷ்டிரர் மதுரைக் கவர்ன

ரால் சிறைப்படுத்தப்பட்டனர். இதனை அறிந்த மங்கம்மாள் அரசாங்கப் புலவர்களை அழைத்து, சௌராஷ்டிரர் பூணூல் அணிதல் முறையாகுமா என்பதை ஆராய்ந்து சொல்லுமாறு ஆணையிட்டார். அவர்களின் முடிவுப்படி, சௌராஷ்டிரர் பிராமணரைப்போலப் பூணூல் அணியலாம் என்னும் உரிமையைப் பனையோலையில் எழுதி அரசாங்க முத்திரையுடன் அரசியார் கொடுத்தார். (சென்னை மக்கள் அறிக்கை, 1901).

## முடிவுரை

சௌராஷ்டிரர் அடக்கமுள்ளவர்; சமயப்பற்றுடையவர்; பிறரிடம் அன்புள்ளவர்; விழாக்களிலும் வேடிக்கைகளிலும் விருப்பம் உள்ளவர். இவர் முதலில் சூரிய வணக்கத்தை மேற்கொண்டவராக இருந்தனர். (சௌரா—சூரியன்). இவருள் சைவரும் உண்டு; வைணவரும் உண்டு; மாத்வரும் உண்டு.

சௌராஷ்டிரருள் சமூகக் கட்டுப்பாடு உண்டு; சமூக நலனுக்கு உழைக்கும் கழகங்கள் உண்டு. ஆயினும் பரம ஏழைகளாக இருக்கும் சௌராஷ்டிரர்களே மிகுதியாக இருக்கின்றனர். செல்வர்கள் இவர்களை உயர்த்த மேலும் பாடுபடவேண்டும்; ஏழைத் தொழிலாளர்களின் வறுமையை ஒழிக்கப் பாடுபடவேண்டும். ஒரு சில வளமனைகளும் (செல்வரையும்), நூற்றுக்கணக்கான குடிசைகளையும் (ஏழைகளையும்) காணும்போது, இச் சமூகச் செல்வர்கள் மேலும் மிகுந்த கவலைகொண்டு, ஏழைகள் நிலையை உயர்த்தியே தீரவேண்டும் என்று கூறுதல் தவருகாது. தொழில் துறையில் பண்பட்ட அறிவைப் பெற்றுள்ள இவ்வினத்தாரைத் தமிழ் மக்கள் பெரிதும் மதிக்கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியது.

# 8. தமிழர் கலைகள்

## தமிழின் பழமை

இன்று உலகில் பேசப்படும் மொழிகள் ஏறத்தாழ மூவாயிரம். இவற்றுள் காலத்தாற் பழைமையும், இலக்கிய வளத்தால் பெருமையும் பெற்றுள்ள மொழிகள் ஆறு. அவை கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், வடமொழி, சீனம், தமிழ் என்பன என்று மொழியாராய்ச்சியாளர் கூறுகின்றனர். இன்றுள்ள தமிழ் இலக்கண நூல்களுள் மிக்க பழமையானது தொல்காப்பியம். அஃது இன்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்குமுன் செய்யப்பட்டது. ஏறத்தாழ ஆயிரத்து அறுநூறு நூற்பாக்களைக் கொண்ட அப்பேரிலக்கணம் செய்வதற்கு, அதற்கு முற்பட்ட இலக்கியங்கள் மிகப் பலவாக இருந்திருத்தல் வேண்டுமல்லவா? எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப் படுவதுபோல இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவதுதானே இலக்கணம்! எனவே, தமிழ் இலக்கியத் தோற்றம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்பது தெளிவாதல் காண்க. அப்பழைய இலக்கியங்கள் இன்று காணுமாறில்லை. ஆனால் அவற்றின் சத்தாகத் தொல்காப்பியம் இன்று விளங்குகின்றது. அப்பெரு நூலைக் கொண்டும் சங்ககாலப் (கி. பி. 300-க்கு முற்பட்ட) பிற நூல்களைக் கொண்டும் பழந்தமிழர் வளர்த்த கலைகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

## 'கலை' என்பது யாது ?

மனிதனது உள்ளத்தைத் தன்வயப்படுத்திப் பெருக்கெடுத்து வெளிப்படும் ஆற்றலே கலை என்பது. இந்த ஆற்றல் காவியமாகவும் ஓவியமாகவும் சிற்பமாகவும் எழில் மிகுந்த கட்டடமாகவும் வெளிப்படலாம். இவ்வாற்றல் இசையாகவும் வெளிப்படும்; இசைக்குரிய கருவிகளை ஆக்கவும் பயன்படும். இவ்வாற்றலே நடனக்கலையையும் நாடகக்கலையையும் தோற்றுவித்தது; பேரெழில் மிகுந்த தாஜ்மஹால் கட்டடத்தையும், கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் அஜந்தாச் சிற்பங்களையும் தோற்றுவித்தது. அபிநயத்தின் வாயிலாக உள் உணர்ச்சிகளைக் காட்ட வல்லதும் இவ்வாற்றலே. சுருங்கக் கூறின், கலை என்பது கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை என்னும் பல கலைகளுக்குப் பிறப்பிடமானது. இக்கலை உணர்ச்சி இல்லாதார் விலங்கு உணர்ச்சி உடையவரேயாவர்; மனிதப் பண்பு அற்றவரே யாவர்.

## கட்டடக் கலை

ஒரு நாட்டு மக்களது உயரிய நாகரிகத்தை உணர்த்தி நிற்பவற்றுள் கட்டடக்கலையும் ஒன்றாகும். பல்லவர் காலக் கட்டடக் கலையை அவர்கள் அமைத்த **குடைவரைக் கோவில்களி**லிருந்தும் காஞ்சி கயிலாசநாதர், வைகுந்தப் பெருமாள் கோவில்களிலிருந்தும் நன்கு அறியலாம். மலைச்சரிவினைக் குடைந்து தூண்களையும் மண்டபங்களையும் அமைத்தல் எளிதான செயலன்றே! பாறையையே கோவிலாகக் குடைந்து அமைத்தலும் செயற்கரிய செயலன்றோ! கற்களை உடைத்து ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோவில் கட்டுதலும் அறிய செயல்தானே! திருச்சுற்றுச் சுவர் முழுதும் சிறு கோவில்களாக மாற்றிச்

சிற்பங்களை அமைத்து வைக்கப்பட்டுள்ள **கயிலாசநாதர் கோவில்** பல்லவர் காலக் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தஞ்சை இராசராசேச்சரம், கங்கைகொண்ட சோழேச்சரம், திரிபுவன வீரேச்சரம், தாராசுரத்தில் உள்ள இராசராசேச்சரம் என்னும் கோவில்களில் அமைந்துள்ள அற்புத வேலைப்பாடு சோழர்காலக் (கி. பி. 900–1300) கட்டடக் கலைத் திறனை உலகறியச் செய்வனவாகும். தஞ்சை இராசராசேச்சரத்தில், சிவலிங்கம் உள்ள கருவறையின்மேல் பல அடுக்குகள் அமைத்துக் கட்டப்பட்ட விமான அமைப்பு வியந்து போற்றத் தக்கது. அவ்விமானம் 13 கோபுர மாடிகளை உடையது ; 216 அடி உயரமுள்ளது. உச்சியில் 25½ அடி சதுர வடிவமுள்ள தளக்கல் போடப் பட்டுள்ளது. அதன் நிறை 80 டன். அக்கல்மீது கலசமும் அதன் தூபியும் அமைந்துள்ளன. தளக்கல்லை மேலே உயர்த்த நான்குமைல் தொலைவிலிருந்து சாரம் போடப்பட்டதாம். நவீன இயந்திரங்கள் இல்லாத அக்காலத்தில் இவ்வற்புத வேலைப்பாடு நடைபெற்றதெனின், தமிழருடைய கட்டடக் கலைத்திறனை என்னென்பது ! தாராசுரம் சிவன்கோவில், குதிரைகள் பூட்டிய உருளைகள் உள்ள தேர் போன்ற அமைப்புடையது. பக்கத்திலுள்ள அம்மன் கோவிலின் முன்மண்டபம் நீரில் மிதக்கக் கூடிய தெப்பம்போல அமைந்துள்ளது.

சோழர்க்குப் பின்வந்த விசயநகர ஆட்சியிலும் மதுரை நாயக்கமன்னர் ஆட்சியிலும் தஞ்சை மகாராட்டிரர் ஆட்சியிலும் கட்டடக்கலை நன்கு வளர்ச்சியுற்றது. மதுரை மீனாட்சியம்மன் கோவிலும் புதுமண்டபமும் திருமலை நாயக்கர் மகாலும் நாயக்கர் காலக் கட்டடக் கலைத் திறனை உலகறியச் செய்வன. ஆயிரக்கால் மண்டபங்களுள் பெரும்பாலன நாயக்கர் காலத்தவை. தஞ்சையில்

உள்ள ஏழடுக்கு அரண்மனை மகாராட்டிரர் காலத்துக் கட்டடக்கலை உயர்வை அறிவிப்பதாகும். ஆர்க்காடு முதலிய இடங்களில் உள்ள அழகிய மசூதிகள், கர்நாடக நவாப் காலத்திய கட்டடக்கலை உணர்வை உணர்த்துவன வாகும்.

## சிற்பக்கலை

மனிதன் தான் காட்ட விரும்பும் பொருள்களின் உருவங்களை மரத்திலோ கல்லிலோ பிறவற்றிலோ அமைத்தல் சிற்பமாகும். இக்கலை கற்காலத்திலிருந்தே தோற்றமானது. இக் கலைஉணர்ச்சி படிப்படியாக வளர்ச்சிபெற்று வந்தது. இறந்த வீரனது உருவத்தைக் கல்லிற்பொறித்து அதனை நட்டு வழிபடுதல் பண்டையோர் வழக்கம். இது மிக்க விளக்கமாகத் தொல்காப்பியத்தில் கூறப்படுகின்றது. சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் உருவத்தைச் செய்து கோவிலில் வைத்து வழிபட்டான் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. பின்வந்த பல்லவர் காலத்தில் சிற்பக்கலை மிக உயர்ந்து காணப் பட்டது. மாமல்லபுரத்தில் உள்ள இரதங்களில் உள்ள உருவச் சிற்பங்களும் பாறைச் சிற்பங்களும் பல்லவர் காலத்தில் எழுந்த தமிழரது சிற்பக்கலைத்திறனை நன்கு காட்டவல்லன.

பின்வந்த சோழர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோவி லிலும் கங்கைகொண்ட சோழேச்சரத்திலும் அமைந் துள்ள சிற்பங்கள் கண்டு மகிழத்தக்கவை. ஏறத்தாழப் பதினென்கடி உயரமுள்ள வாயிற் காவலர் உருவச் சிற்பங் கள் வியத்தகு வேலைப்பாடு கொண்டவை. விசாரசர் மருக்கு உமா தேவியுடன் எழுந்தருளியுள்ள சிவபெரு மான் அமர்ந்த கோலத்தில் அவரது தலையில் கொன்றை மாலையைச் சூடி அவர்க்குச் சண்டீசப்பதமும் அருளும்

காட்சியைப் புலப்படுத்தும் சிற்பம் கண்ணையும் கருத்தை யும் ஈர்க்கவல்லது. இஃது ஏறத்தாழத் தொள்ளாயிரம் ஆண்டுகட்குமுன் செய்யப்பட்டதாயினும், நேற்று மாலை தான் செய்யப்பட்டது என்று கூறத்தக்க பேரழகோடு விளங்குகிறது எனின், சோழர்காலச் சிற்பத்திறனை என் னென்பது! பின் வந்த விசய நகர ஆட்சியிலும் நாயக்க மன்னர் ஆட்சியிலும் அமைந்த சிற்பங்களைக் கோவையை யடுத்த **பேரூரிலும்** தாரமங்கலத்திலும் மதுரைப் புது மண்டபத்திலும் திண்டுக்கல்லையடுத்த தாடிக்கொம்பிலும் காணலாம்.

## ஓவியக் கலை

பல்லவர்கால ஓவியக்கலை நுட்பத்தைச் சித்தன்ன வாசல் குகைக் கோவிலில் உள்ள நடிகையர் ஓவியங்களைக் கொண்டும் மேற்கூரை ஓவியங்களைக் கொண்டும் தெளி வாக அறியலாம். ஓவிய ஆராய்ச்சி நிபுணரான வட நாட்டு அறிஞர் பலர் இவ்வோவியங்களில் அமைந்துள்ள வேலை நுட்பத்தை உளமாரப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வரையப்பெற்ற இவ்வோவி யங்கள் இன்றளவும் கண்கவரத்தக்க நிலையில் இருத்தலைக் காண, இவற்றைத் தீட்டிய ஓவியக்கலைவாணரது தொழில் திறமை வெள்ளிடை மலைபோல் விளக்கமாகின்றது.

பின்வந்த சோழர் காலத்தில் ஓவியக்கலை எவ்வாறு இருந்தது என்பதைத் தஞ்சைப் பெரிய கோவிலில் உள்ள ஓவியங்கள் இனிது விளக்குகின்றன. இறைவன் சுந்தரர் திருமணத்தைத் தடுத்தாட்கொண்ட வரலாறு தஞ்சைப் பெரிய கோவில் சுவரில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சோழர்கால ஆடல் பாடல் மகளிரை உணர்த்தும் ஓவியம் அழகு வழியத் தீட்டப்பட்டுள்ளது. இவ்வோவியங்களி

லிருந்து அக்கால ஆடவர் பெண்டிர் அணிவகைகளும் உடைவகைகளும் கூந்தல் ஒப்பனைகளும் பிறவும் நன்கு அறியலாம். நாயக்கர் கால ஓவியக்கலை மாண்பை மதுரை மீனாட்சியம்மன் கோவிற் சுவர்கள்மீது வரையப்பட்டுள்ள திருவிளையாடற் புராண ஓவியங்களைக் கொண்டு உணர லாம். இவை அக்கால மக்களுடைய உடைச் சிறப்பையும் அணிவகைகளையும் பிறவற்றையும் நன்கு உணர்த்த வல்லன.

## இசைக் கலை

தமிழ்மொழி இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இதனால் தமிழர் இசைத்தமிழை நடுநாயகமாக வைத்துப் போற்றி வந்தனர் என்பது தெளிவன்றோ? சங்க காலத்தில் இசைத்தமிழ் நூல்கள் பல இருந்தன; இசைத்தமிழ்ப் புலவர் பலர் இருந்தனர். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் முதலிய ஏழிசைகளையும் முல்லைப்பண் முதலிய பண்வகைகளையும் சங்க நூல்களில் பரக்கக் காணலாம். யாழ், முழவு, தண்ணுமை, குழல் முதலிய இசைக்கருவிகள் மிகப் பலவாகத் தமிழகத்தில் வழக்கில் இருந்தன. இசைத்தமிழைப் போற்றிவளர்த் தவர் பாணர் என்பவர். பாணரும் பாடினியரும் தமிழரச ரால் பாதுகாக்கப்பட்டனர். எனவே, இசைத்தமிழ் நன்கு வளர்ச்சியுற்றது. நாயன்மார் காலத்தில் தமிழிசை செல்வாக்குப் பெற்றிருந்தது. விசயநகர ஆட்சிக் காலத் தில்தான் கருநாடக இசை தமிழகத்தில் கால்கொண் டது. அது முதல் தமிழிசை மறைந்து கருநாடக இசை தமிழகம் முழுதும் பரவியது. இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களது பெருமுயற்சியால் இப்பொழுது தமிழிசை மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றது.

## நடனக் கலை

இசையோடு இணைந்து நிற்பது நடனம். மெய்ப்பாடு தோன்ற நடிப்பது நடனம். உள்ளத்து உணர்ச்சி உடம்பில் புலப்படுதலே மெய்ப்பாடு. தொல்காப்பியத்தில் இதுபற்றிய ஓர் இயலே இருக்கின்றது. ஒன்பது வகைச் சுவைகளையும் கைகால் அசைவுகளாலும் முகத்தோற்றத் தாலும் தெரிவிப்பதே நடனம். இக்கலைக்கு மிகுந்த விறல் (திறமை) வேண்டும். இங்ஙனம் விறல் தோன்ற நடித்தவள் விறலி எனப்பட்டாள். இவ்விறலியர் பாணரை யடுத்தே வள்ளல்களை நாடிச் சென்று நடித்துப் பரிசும் புகழும் பெற்றனர். இவர்தம் பேரழகும் கலைத்திறனும் சங்க நூல்களில் சிறப்பாகப் பேசப்படுகின்றன. மாதவி ஆடிய நடனம் சிலப்பதிகாரம்—அரங்கேற்று காதையில் செவ்விய முறையில் பேசப்படுகின்றது. பல்லவர் காலத்து நடனக்கலையை அறிய நடனச் சிற்பங்களும் நடிகையர் ஓவியங்களும் பெருந்துணை புரிகின்றன. சித்தன்ன வாசலில் உள்ள நடிகையர் ஓவியங்கள், அக்கால நடன மாதருடைய கூந்தல் ஒப்பனை, அணிச் சிறப்பு, உடைச் சிறப்பு முதலியவற்றை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகின்றன.

பிற்காலத்தில் பரதநாட்டிய முறையைப் பெருங் கோயில்களில் உள்ள எண்ணிறந்த சிற்பங்களைக் கொண்டு உணரலாம். தில்லையில் உள்ள சிவகாமி யம்மன் கோவிலிலும் மேலைக்கோபுர வாயிலிலும், திருவண்ணமலைக் கோபுரவாயிலிலும் இவ்வகை நடனச் சிற்பங்கள் மிகப் பலவாகக் காண்கின்றன. இந்நடிகக் கலையை ஒரு தனிக் கூட்டத்தார் நெடுங்காலமாக வளர்த்து வந்தனர். இன்று இக்கலை பல வகுப்பாராலும் ஆவலோடு கற்கப்படுகின்றது. வாழையடி வாழையாக வந்த கூத்தியர் இனம், தேவதாசி முறை ஒழிப்பால் சீரழிந்துவிட்டது.

இன்று இம்மரபைச் சேர்ந்த கூத்தியரை அரங்கிற் காணு தல் முயற் கொம்பாகிவிட்டது.

## நாடகக் கலை

இசையும் நடனமும் இணைந்து ஆங்காங்கு உரை நடை நிகழவருவது நாடகம். இக்கலையும் பல நூற்றுண்டு களாக இந்நாட்டில் வளர்ந்து வந்ததேயாகும். பூம்புலியூர் நாடகம், இராசராச நாடகம், இராசராசேச்சர நாடகம் எனப் பல நாடகங்கள் சோழர்காலத்தில் நடைபெற்று வந்தன என்பதைக் கல்வெட்டுக்களால் அறியலாம். சோழ மன்னர் நாடக ஆசிரியர்க்குப் பரிசும் பட்டமும் வழங்கிப் போற்றிவந்தனர். சங்க காலத்தில் நாடகம் **கூத்து** என்ற பெயருடன் இருந்தது; கூத்தர் நாடக மாடுவர்; கூத்தியர் நாடகமாடும் பெண்மணிகள். தஞ்சை மாவட்டத்துக் கபிஸ்தலத்தில் கூத்தாடியர் தெரு இன்றும் இருகின்றது. இக்கலை பிற்காலத்தில் — மகாராட்டிர மன்னர்கள் காலத்தில் நன்கு வளர்ச்சி பெற்றது. **சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்** என்பது தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் பல நாடகங்கள் தோன்றி நாடகக்கலையை நன்கு வளர்த் தன. இவ்விருபதாம் நூற்றுண்டில் டி. கே. எஸ். சகோதரர்களும் பிறரும் நாடகக் கலையை நலமுற வளர்த்து வருகின்றனர். இந்த ஐவகைக் கலைவாணர்க்கும் நமது உளங்கனிந்த பாராட்டு உரியதாகுக.

# 9. இலக்கியம்-1

## இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும்

மக்களின் உள் உணர்ச்சியிலிருந்து மொழி வடிவில் வெளிப்படுவது இலக்கியம். சமுதாயத்து எல்லா மக்களும் ஒரே நிலையில் கல்வி கற்றவர்களல்லர்; ஒரே வகை வாழ்க்கை முறையையும் மேற்கொண்டவரல்லர்; ஒரேவகை அநுபவத்தையும் உடையவர் அல்லர்; ஒரே வகை நாகரிகமும் பண்பாடும் பெற்றவருமல்லர்; குறிஞ்சி முதலிய நிலவகைகளே இந்த உண்மையை விளக்கும் சான்றுகளாகும். நாள்முழுதும் வயிற்றுக்கே உணவு தேடி அலையும் குறிஞ்சி நிலத்தாரிடமும், பாலை, நெய்தல், முல்லை நிலத்தாரிடமும் கல்வியையோ கலை வளர்ச்சியையோ மிகுதியாக எதிர் பார்த்தல் இயலாது. மருதநில மக்களிடையே இவற்றை மிகுதியாக எதிர் பார்க்கலாம். நீர்வளமும் நிலவளமும் உடைய அப்பகுதியில்தான் மக்கள் சிறிது பொழுதே உணவுப் பொருள்களை உண்டாக்கச் செலவிடுவர். எனவே, அவர்களுக்கு ஓய்வு கிடைக்கிறது. அந்த ஓய்வில் அவர்கள் கல்வியைப் பற்றியும் கலைவளர்ச்சியைப் பற்றியும் கருதுதல் இயற்கை

ஆயினும் எல்லா நிலங்களிலும் வாழ்கின்ற மக்கள் மணவுணர்ச்சியுடையவர்களே. இன்பதுன்பங்கள்எல்லோருக்கும் பொதுவானவை. விழாக்களும் விருந்துகளும் களியாட்டங்களும் எல்லா நிலங்களுக்கும் பொதுவானவை. அவர்கள் தத்தம் அறிவு நிலைக்கேற்ப—

பொருளாதாரத்திற்கு ஏற்ப—பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப—விழாக்களையும் களியாட்டங்களையும் நிகழ்த்துவது இயல்பு. கல்வியறிவே யில்லாத கொண்டர், சவரர், தொதவர் முதலிய மலைவாழ் மக்கள் பாடிக்கொண்டே ஆடுவதை இன்றும் காண்கிறோம். கல்வியறிவற்ற ஏழைத் தமிழ்மக்கள் வயல்வேலை செய்யும் போதும் வண்டியிழுக்கும் போதும் வண்டி ஓட்டும் போதும் ஏற்றம் இறைக்கும் போதும் நெல் அவல் முதலியவற்றைக் குற்றும் போதும் இன்றளவும் பாடிவருகின்றனர். இவை **கிராமியப் பாடல்கள்** என்று இன்று கூறப்படுகின்றன. இவை மிக்க சுவையுடையவை; உழைக்கும் மக்களுடைய உள்ளங்களை ஈர்க்கத் தக்கவை.

## இவைதாம் முதலில் தோன்றிய இலக்கியம்

மனிதன் ஆற்றங்கரை நகரத்தில் அமர்ந்து நிலைத்த பிறகுதான் உழவும் கைத்தொழிலும் வளம் பெற்றன. அப்பொழுது அறிவும் வளம் பெற்றது. சமுதாயம் தன் மொழிக்குரிய எழுத்துக்களை அமைத்துக் கொண்டது. அதுகாறும் வாயளவில் இருந்த பாக்கள் எழுத்துருவைப் பெற்றன. கருத்துக்களுக்கு ஏற்பச் செய்யுட்களின் அடிகளும் சுருக்கமாகவும் நீளமாகவும் அமைந்தன.

நிலையான அரசு ஏற்படுவதற்கு முன்பு மக்கள் அறிவு குடும்ப அளவிலேயே நிலைத்திருந்தது. அவர்கள் குடும்பத்தையே உலகமாகக் கருதினார்கள். மணத்திற்குரிய மங்கை நல்லாளை இளைஞன் ஒருவன் காணுதலும் காதல் கொள்ளுதலும் திருமணத்திற்கு முன் அக்காதல் வாழ்வை நீட்டித்தலும் அப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகளும் திருமணத்திற்குப் பின் நடைபெறும் நிகழ்ச்சிகளுமாகிய இவையே பழந்தமிழ் மக்களின் கருத்தைக் கவர்ந்தன. அதாவது, குடும்பத்திற்கு அப்பால் அவர்கள் அறிவு

இருந்த அளவைவிடக் குடும்பத்தைப் பற்றிய அளவு மிகுதியாக இருந்தது. அந்நிலையில் அவர்களிடம் காதல் இலக்கியமே மலர்ந்தது என்பதில் வியப்பில்லையல்லவா? அதனால்தான் சங்கச் செய்யுட்களில் பெரும்பாலன அகப் பொருள் பற்றியே அமைந்துள்ளன.

அரசும் அரச உறுப்புக்களும் நிலைத்த பின்பே நாட்டைப் பாதுகாக்கவும் பிறநாடுகளைக் கைப்பற்றவும் போர்முறை தேவைப்பட்டது. அறிவிற் சிறந்த தமிழ் மக்கள் அதற்கும் பலவழிகளை வகுத்தனர்; வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை என்று போர் முறைகளை வகுத்தனர். ஒவ்வொரு போர் முறைக்கும் பல துறைகளை (படிகளை) வகுத்தனர். அவற்றை நூல்களிலும் எழுதினர். இவைபற்றிய விவரங்களைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலும் புறப் பொருள் வெண்பா மாலையிலும் விரிவாகக் காணலாம். இத்துறைகளில் அமைந்த பாடல்களைப் புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் பத்துப் பாட்டிலும் காணலாம். எனவே, போரைப் பற்றிய பாடல்களும் தமிழரிடையே மலர்ச்சி பெற்றன.

தொடக்க காலத்தில் பழந்தமிழர் தனிப் பாக்களையே பாடிவந்தனர்; அறிவும் நாகரிகமும் வளரவளர, உலா முதலிய சிறு நூல்களைப் பாடினர்; பல புது நூல்களை எழுதத் தொடங்கினர் நாடகநூல்களையும் எழுதலாயினர். பின்பு பிற மொழி நூல்களை மொழிபெயர்க்கத் தொடங்கினர்; இவையெல்லாம் தொல்காப்பியர்க்கு முன்னும் (கி. மு. 300-க்கு முன்னும்) தொல்காப்பியர் காலத்திலும் இருந்தன என்பதைத் தொல்காப்பியம் கொண்டே உணரலாம். சங்ககால மொழிபெயர்ப்பு நூல்களுள் சிறந்தது மாபாரதம். இதனைக் கல்வெட்டால் அறியலாம்.

வடநாட்டில் தோன்றித் தென்னகத்தில் பரவிய வைதிக சமயத்தார் இராமயண, பாரத நிகழ்ச்சிகளைப் பரப்பத் தமிழர் அறியலாயினர்; சமண, பௌத்த சமயங்களாலும் பல வரலாறுகளைத் தெரியலாயினர். இவற்றால் பல நூல்கள் தமிழில் தோன்றின. காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்து வளர்ந்த கோவலன்—கண்ணகி வரலாறே **சிலப்பதிகாரம்** என்ற முதல் தமிழ்க் காப்பியமாக உருவெடுத்தது. மாதவியின் மகளான மணிமேகலை பற்றிய வரலாறு மணிமேகலை என்னும் காவியமாக உருப்பெற்றது. இவ்விரண்டும் சங்ககால இறுதியில் செய்யப்பட்ட காவியங்கள். (ஒருவரைப் பற்றிய பெரிய வரலாறு—காவியம்.)

அகப்பொருள் பற்றியும் புறப்பொருள் பற்றியும் பல்வேறு புலவர்கள் பல்வேறு கருத்துக்களில் பாடிய தனிப்பாடல்களின் தொகுதியே எட்டுத் தொகையும் பத்துப் பாட்டுமாகும். எட்டுத் தொகுப்பு நூல்களே எட்டுத்தொகை என்பன. அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம், பட்டினப்பாலை என்பன பத்துப் பாட்டு என்பவை.

எட்டுத்தொகையுள் புறநானூறு, பதிற்றுப்பத்து என்பன புறப்பொருள் பற்றியவை. பரிபாடல்—புறமும் அகமும் பற்றியது. ஏனைய ஐந்தும் அகப்பொருள் பற்றியவை. இப்பாடல்களால் தமிழர் மேற்கொண்டு வந்த அகப்பொருள் வாழ்க்கை முறையும் புறப்பொருள் வாழ்க்கை முறையும் நமக்குத் தெளிவாகத் தெரிகின்றன. தமிழர் ஒழுக்கத்தை விழுக்கலனுக்க் கொண்டவர்—

மன்னரும் இங்ஙனமே வாழ்ந்தவர்—மானவுணர்ச்சியும் வீரவுணர்ச்சியும் மிக்கவர்—போரில் புறங்கொடாதவர்—தமிழர் நாட்டுப்பற்று மிக்கவர்—தவறு சுட்டியவழி அரசர் திருத்தப்பெற்றனர்—வீரத்தாய்மார் நாட்டு உரிமையைப் பெரிதும் நாடினர்—சமுதாயத்தில் ஆடவரும் பெண்டிரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர்—ஔவையார் போன்ற கற்றறிந்த பெண்மணிகள் அரசியல் தூதராகவும் இருந்தனர்—பெண்பாற் புலவர்கள் அரசரால் சிறப்பிக்கப் பெற்றனர்—தமிழர் உள்நாட்டு வாணிகத்திலும் அயல் நாட்டு வாணிகத்திலும் சிறந்திருந்தனர்—அரசர் பண்பட்ட படைகளை வைத்திருந்தனர்—கைத்தொழிலும் பயிர்த்தொழிலும் சிறந்திருந்தன—தமிழ்மக்கள் உயர்ந்த குறிக்கோள்களுடன் வாழ்க்கை நடத்தி வந்தனர்—இயற்றமிழை வளர்க்கப் புலவரும், இசைத்தமிழை வளர்க்கப் பாணரும் பாடினியரும், நாடகத் தமிழை வளர்க்கக் கூத்தரும் விறலியரும் இருந்தனர்—தமிழ்க் குறுநிலமன்னரும் நெடுநில மன்னரும் இம்மூவகைப் புலவரையும் தம் உயிர் போலப் பாதுகாத்தனர் என்பன போன்ற செய்திகளை இத் தொகைப் பாக்கள் தெரிவிக்கின்றன.

## திருக்குறள்

உலகம் போற்றும் திருக்குறளை **மனிதவாழ்க்கை நூல்** என்று சொல்லலாம். குழந்தை வளர்ச்சி—கல்வி—சமுதாயத்தில் பழகவேண்டும் முறை—யாரோடு பழக வேண்டுமென்பது—எவற்றைக் கொள்ளவேண்டும் எவற்றைத் தள்ளவேண்டும் என்பன—பயிர்த்தொழில்—அரசியல்—சமுதாய வாழ்க்கையில் நடந்து கொள்ளும் முறை—மனைவியின் சிறப்பும் கடமையும்—மனைவாழ்க்கை—இல்லறத்தார் கடமை—இறைவனைப் பற்றிய கருத்து—என்பன போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகள் யாவும் திருக்குறளில் இடம்பெற்றுள்ளன.

திருக்குறள் செய்யுள் வகையிலேயே மிகச் சிறியதான குறள் வெண்பாவினுல் செய்யப்பட்டது ; அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பிரிவுகளை உடையது ; 133 அதிகாரங்களைக் கொண்டது; 1330 குறட் பாக்களைக் கொண்டது ; இது ஆங்கிலம் முதலிய மேனுட்டு மொழிகளிலும் வங்காளி முதலிய கீழ்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளமையே இதன் சிறப்பை இனிதுணர்த்தும். இது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதன் சிறப்பை நோக்கிப் பின்வந்த ஆசிரியர்கள் தம் நூல்களில் இதன் சீரிய கருத்துக்களையும் தொடர்களையும் பாக்களையும் எடுத்தாண்டுள்ளனர். தமிழ் நூல்களில் திருக்குறள் ஒன்றே உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. மக்கள் அனைவர்க்கும் பொதுவான நெறிமுறைகளைக் கூறுவதால் இந்நூல் உலகத்தாரது பாராட்டுக்கு உரியதாக உள்ளது. இதனது இத்தகைய சிறப்பை நோக்கியே,

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

என்று பாரதியார் பாராட்டலாயினர்.

## சிலப்பதிகாரம்

சோணுட்டுத் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிக மக்களான கோவலன், கண்ணகி என்பவர்களின் வரலாற்றைக் கூறும் பெரிய காவியமே சிலப்பதிகாரம் என்பது. கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து வளர்ந்தனர்; ஒருவரையொருவர் மணம்செய்துகொண்டனர்; சிறிது காலம் வாழ்ந்தனர் ; கோவலன் மாதவி என்னும் கணிகையின் கூட்டுறவால் தன் செல்வத்தை இழந்தான் ; பின்பு தன் அறியாமைக்கு இரங்கித் தான் பிறந்து வளர்ந்த நகரத்தி

விருக்க நாணங்கொண்டு, கண்ணகியின் சிலம்பை விற்று, வரும் பணத்தை முதலாக வைத்துப் பாண்டியன் தலை நகரான மதுரையில் வாணிகம் செய்து பிழைக்க விரும்பினான்; அவன் விருப்பத்தின்படி அவன் மனைவியும் உடன் சென்றாள். இச்செய்தியைக் கூறும் பகுதி சிலப்பதிகாரக் காவியத்தில் புகார்க்காண்டம் என்று சொல்லப்படும்.

கோவலனும் கண்ணகியும் நெடுந்தொலைவு நடந்து மதுரையை அடைந்தனர்; கவுந்தியடிகள் என்னும் தவ மூதாட்டியும் அவர்களோடு வழிநடந்தாள்; அவள் உதவியால் கோவலனும் கண்ணகியும் மதுரை இடைப் பாடியில் மாதரி வீட்டில் தங்கினர்; கோவலன் தன் ஒழுக்கக் கோட்டை நினைந்து வருந்தினான்; கண்ணகியின் அடக்கம், பொறுமை முதலிய நற்பண்புகளைப் பாராட்டினான்; அவளிடம் விடைபெற்று அவள் தந்த சிலம்பை விற்கச் சென்றான்; அவ்வமயம் பாண்டிமாதேவியின் ஒரு சிலம்பை அரண்மனைப் பொற் கொல்லன் கவர்ந்து கொண்டு அது காணுமற் போய்விட்டது என்று கதை கட்டி விட்டான்; அவன் கோவலன் கொணர்ந்த சிலம்பைக் கண்டதும், அது காணுமற்போன மாதேவியின் சிலம்பு எனக்கூறி, அரசனை நம்பச் செய்து கோவலனைக் கொல்வித்தான்; இதனை அறிந்த கண்ணகி கடுஞ்சீற்றங் கொண்டு மதுரை நகரத்தெருக்களில் அழுது புலம்பினாள்; வெட்டுண்ட தன் கணவன் உடலைக் கண்டாள்; ஆவேசம் கொண்டாள்; பாண்டியன் முன்சென்று தன் வழக்கை எடுத்துரைத்தாள்; கோப்பெருந்தேவியின் காற்சிலம்பில் முத்துப்பரல்கள் இருந்தன; கண்ணகியின் சிலம்பில் மாணிக்கப் பரல்கள் இருந்தன; இவற்றைக் கண்ட பாண்டியன் கோவலனைக் கொல்வித்தது தவறு என்று உணர்ந்தான்; உடனே மயக்கமுற்று வீழ்ந்து இறந்தான்;

பாண்டி மாதேவியும் மனம் பதைத்து உயிர்விட்டாள்; சீற்றம் தணியாத கண்ணகி தவறுடை மக்கள் வாழ்ந்து வந்த மதுரைப் பகுதியை எரித்தாள். மதுரையின் அதிதேவதை (மதுராபதி என்னும் பெண்தெய்வம்) கண்ணகியின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறியது; கண்ணகி வருத்தம் தணியாதவளாய் மேற்குக் கோட்டை வாசல் வழியாக வெளியே சென்றாள்; அங்கிருந்த துர்க்கையின் கோயிலில் வாழ்வரசிக்கு அடையாளமாக இருந்த தன் கைவளையல்களை உடைத்து எறிந்தாள்; பின்பு வையையின் வடகரை வழியே நடந்து மலைநாட்டை அடைந்தாள்; இச்செய்திகளைக் கூறும் சிலப்பதிகாரப் பகுதி மதுரைக் காண்டம் எனப்படும்.

மலைநாட்டை அடைந்த கண்ணகி ஒரு வேங்கை மர நிழலில் நின்றாள்; அப்பொழுது வானத்திலிருந்து ஒரு விமானம் வந்தது. அதில் தேவர்களுடன் கோவலன் இருந்தான்; அவன் கண்ணகியை விமானத்திலேற்றிக் கொண்டு மறைந்தான்; இக்காட்சியைக் கண்ட மலைநாட்டு மக்கள் தம் வேந்தனை சேரன் செங்குட்டுவனிடம் விளக்கிக் கூறினர்; உடனிருந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்ற புலவர் கண்ணகி வரலாற்றை விரித்துக் கூறினார்; சேரமாதேவி கண்ணகியைக் கோவில் கட்டி வழிபடவேண்டும் என்று கூறினாள்; வடநாட்டு ஆரிய மன்னர் தமிழரசர் வீரத்தை இகழ்ந்து கூறியதாகச் சேர மன்னன் கேள்வியுற்றான்; அதனால் வடநாடு சென்று ஆரிய மன்னரை வென்று இமயமலையிலிருந்து பத்தினியின் உருவத்தைச் செதுக்கத்தக்க கல்லைக் கொண்டுவரப் புறப்பட்டான்; அவன் பிரயாணம் பதினெட்டு மாதம் நடைபெற்றது; கனகவிசயர் என்ற ஆரிய மன்னரைச் சிறைப்படுத்தி அவர்கள் தலையில் சிலைக்குரிய கல்லைக் கொண்டுவந்தான்.

காஞ்சிமாநகரில் கண்ணகிக்கு ஒரு கோவிலைக் கட்டினான்; கோவில் பூசைக்குரிய எல்லா வசதிகளையும் செய்தான்; அந்த விழாவில் செங்குட்டுவன் நண்பரான இலங்கைக் கயவாகு வேந்தனும் மாளுவ மன்னனும் பிறரும் கலந்துகொண்டனர்; அம்மன்னர்கள் தத்தம் நாடுகளில் கண்ணகிக்குக் கோவில்கள் எடுப்பித்தனர்; செங்குட்டுவன் விழா நடத்திய போழ்து கண்ணகித் தெய்வம் விண்ணிடைத் தோன்றி வரம் அளித்தது; இக்காட்சியைக் கண்ட இளங்கோவடிகள் கண்ணகியின் வரலாற்றை ஒரு பெரிய காவியமாகப் பாடினர்; அதன் பெயரே சிலப்பதிகாரம் என்பது; இச்செய்திகளெல்லாம் சிலப்பதிகாரத்தின் மூன்றும் பகுதியாகிய **வஞ்சிக்காண்டத்தில்** காணலாம்.

**சிலப்பதிகாரம்:** கண்ணகி காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்து வளர்ந்தாள்; கணவனோடு வாழ்ந்தாள்; பின்பு பாண்டிய நாட்டுத் தலைநகரான மதுரை சென்றாள்; அங்குக் கணவனை இழந்தாள்; பின்பு சேரநாடு சென்று வானுலகம் அடைந்தாள்; எனவே, கண்ணகி வரலாறு சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் தொடர்பு உடையதாயிற்று. மூன்று தலைநகரங்களும் தொடர்பு கொள்வதாயிற்று; இவ்வரலாற்றில் முத்தமிழ் வேந்தரும் குறிக்கப்பட்டுள்ளனர்; சோழன் மாதவியின் அரங்கேற்றத்தில் கலந்து கொண்டவன். அவருள் பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொல்வித்தவன்; சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்தவன். இவ்வரலாறு, (1) அரசியல் தவறியவர்க்கு அறமே எமனாகவந்துமுடியும், (2) சிறந்த பத்தினியைப் பெருமக்கள் போற்றுவார்கள் (3) ஊழ்வினை தன்பயனை உண்டாக்கவல்லது—என்னும் மூன்று படிப்பினைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது; இவற்றை மக்களுக்கு அறிவுறுத்தவே தாம் சிலப்பதிகாரம் செய்ததாக இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

இக்காவியத்தில் குறிஞ்சி நிலச் செய்திகளைக் காட்சிக் காதையால் அறியலாம்; பாலை நிலச் செய்திகளை வேட்டுவ வரியால் தெரியலாம்; முல்லை நிலச் செய்திகளை ஆய்ச்சியர் குரவையால் அறியலாம்; மருத நிலச் செய்திகளை நாடுகாண் காதையாலும் பிற காதைகளாலும் அறியலாம்; நெய்தல் நிலச் செய்திகளைக் காவிரிப்பூம் பட்டினத் துறைமுக வருணனையால் அறியலாம்; தமிழகத்துத் தலைநகரங்களான காவிரிப்பூம்பட்டினம், மதுரை, வஞ்சிமாநகர் ஆகியவை பற்றிய விவரங்களை— தெருக்களின் அமைப்பு, கடைத்தெருவின் சிறப்பு, பல வகைக் கோவில்களைப் பற்றிய விவரங்கள், நகர மக்களுடைய பழக்க வழக்கங்கள் ஆகிய விவரங்களை—அறியலாம்; அக்கால உள்நாட்டு வாணிகம், கடல் வாணிகம், திருமண முறை, நடனக்கலை, போர்முறை, தமிழரசர் வீரம், சைவம், வைணவம், சமணம் ஆகிய சமயங்கள் முதலியவை பற்றிய விவரங்களையெல்லாம் இக் காவியத்தில் காணலாம்; இப்பெருங் காவியம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் தன்னகத்தே கொண்டது; மூன்று அரசர்களைப் பற்றிய சிறப்புக்களைக் கூறுவது; தமிழரசர்தம் தமிழ்ப் பற்றையும் தமிழ் வீரத்தையும் விளக்குவது; கரிகாலன் வடநாட்டில் வெற்றி பெற்ற விவரங்கள், செங்குட்டுவன் உத்தர கோசலத்தில் (கங்கைக்கு வடக்கே) ஆரிய மன்னரை வென்றமை, நெடுஞ்செழியன் 'ஆரியப் படைகடந்த' என்ற அடைமொழி பெற்றமை இவைபோன்ற தமிழரசர் வீரச் செயல்களைத் தெரிவிப்பது.

இளங்கோவடிகள் மிகச் சிறந்த குணமும் விருப்பு வெறுப்பற்ற மனப்பான்மையும் உடையவர் என்பது, அவர் முத்தமிழ் வேந்தரை ஒன்றுபோலவே பாடியிருத்தலைக்கொண்டு அறியலாம். கோவலனும் கண்ணகியும்

தனிமனையில் வாழ்ந்த விவரம், மாதவியின் அரங்கேற்றம், அவள் ஒப்பனை செய்துகொண்ட விவரம், மாதவியும் கோவலனும் கடற்கரையில் பாடியனவாகக் கூறப்படும் பாடல்கள், அவற்றின் பொருள் நுட்பம், வேங்கடத்திலும் அரங்கத்திலும் உள்ள திருமால் வருணனை, கணவனை இழந்த கண்ணகி மதுரைத் தெருக்களில் புலம்பிச் சென்ற துன்பக் காட்சி, மலைநாட்டு வருணனை இன்ன பிறவும் இளங்கோ அடிகளது இணையற்ற பெரும் புலமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். சங்ககால இறுதியில் செய்யப்பட்ட இப்பெருங் காவியம் தமிழகத்துக் குடிமகள் ஒருத்தியைப் பற்றியது—ஒரு தமிழ்ப் பெண்மணியைப் பற்றியது. இராமாயணம், பாரதம், சிந்தாமணி, சூளாமணி போன்றவை வடநாட்டுக் கதைகள் ; முதலில் வடமொழியில் எழுதப்பெற்றவை. ஆனால், சிலப்பதிகாரம் முதலில் தமிழில் எழுதப்பட்டது ; இது தமிழ்நாட்டுக் கதை ; தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டுவது. சுருங்கக் கூறின், மேலே கூறப்பெற்ற எல்லாச் சிறப்புக்களையும் தன்னகத்தே பெற்றுள்ள தமிழ்க் காப்பியம் இதனைத் தவிர வேறொன்றுமில்லை என்று துணிந்து கூறலாம்.

## மணிமேகலை

மதுரையில் கோவலன் கொலையுண்ட பொழுது மதுரைக் கடைத்தெருவில் நெல் முதலிய கூலவகைகளை விற்றுவந்த வணிகருள் **சாத்தனார்** என்பவர் ஒருவர் ; அவர் கூலவாணிகம் செய்த காரணத்தால் (மதுரைக்) **கூல வாணிகன் சாத்தனார்** எனப்பட்டார். அவர் சேரன் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகளுக்கும் உற்ற நண்பர் ; கண்ணகி விண்ணகம் சென்ற காட்சியைக் குன்றக்குறவர் செங்குட்டுவனிடம் கூறியபொழுது சாத்த

ஞர் உடனிருந்தார். அவர் கண்ணகி வரலாற்றைச் செங்குட்டுவனுக்கும் இளங்கோவடிகட்கும் விளக்கமாகக் கூறினர். அதன்பிறகே செங்குட்டுவன் வடநாடுசென்று கல்லைக் கொண்டுவந்து கண்ணகியின் உருவம் பொறித்துக்கோவில் எடுப்பித்தான். இளங்கோவடிகள் கோவலன், கண்ணகி வரலாற்றைச் சிலப்பதிகாரம் என்ற காவியமாகப் பாடினர். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைச் சாத்தனர் மணிமேகலை என்ற பெயரில் முப்பது காதைகளைக் கொண்ட பெருங் காவியமாகப் பாடினர்.

கோவலன் இறந்த செய்திகேட்ட மாதவி தன் மகளான மணிமேகலையை ஆடல், பாடல்களில் விடாமல் பௌத்த முனிவர் தொடர்பில்—தவநெறியில் விடத் துணிந்தாள். மாதவியின் தாய் அவளைப் பொதுமகளாக்க விரும்பித் தோற்ருள். நாடாண்ட சோழன் மகனை உதயகுமாரன் மணிமேகலையைத் தனக்கு உரியவளாக்க முனைந்தான்; இறுதியில் வெட்டுண்டு இறந்தான். மணிமேகலா தெய்வத்தின் உதவியால் மணிமேகலை மூன்று மந்திரங்களை அறிந்தாள்; அவற்றின் உதவியால் வேண்டியபோது உருமாறினள்; விண்ணிற் பறந்து சென்ருள்; எடுக்க எடுக்கக் குறையாத அமுதசுரபி என்னும் பிச்சைப் பாத்திரத்தைக் கொண்டு அவள் ஏழைகளுக்கும் பிற உயிர்களுக்கும் அன்னதானம் செய்தாள்; சாவகம், மணிபல்லவம் முதலிய கடல்கடந்த இடங்களுக்கும் பறந்து சென்ருள்; வஞ்சிமாநகரம் சென்று அங்கு வழிபட்டுவந்த கண்ணகியின் உருவச்சிலையை வணங்கினள்; காஞ்சி சென்று பஞ்சத்தைப் போக்கினள்; சோழனிடம் கூறிச் சிறைச்சாலையை அறச்சாலை யாக்கினள். இவ்வாறு பல நலங்களைச் செய்த மணிமேகலை, மதவாதிகள் பலரைச் சந்தித்து அவரவர் மதக் கொள்கை

களைக் கேட்டறிந்தாள்; இறுதியில் பௌத்த சமயமே சிறந்தது எனத் துணிந்தாள்; அறவண அடிகள் என்ற பௌத்த முனிவரிடம் அறிவுரை பெற்று யோகத்தில் அமர்ந்தாள். இந்த விவரங்களைக் கூறுவதே மணி மேகலை என்னும் பெருங் காவியம்.

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுக் கொருமுறை இந்திரவிழா நடைபெற்று வந்தது. அதைப் பற்றிய விவரங்களை யெல்லாம் மணிமேகலையில் காண லாம். காஞ்சி, வஞ்சி, காவிரிப்பூம்பட்டினம் இவை பற்றிய விவரங்களை இக் காவியத்தில் காணலாம். அக் காலத் தமிழர் கடல்கடந்து வாணிகம் செய்த விவரங்களை யும், அவர்கள் பல மொழிகளிலும் பேச அறிந்திருந்தனர் என்பதையும், கற்புடை மகளிர் சிறப்புக்களையும், பௌத்த சமயக் கொள்கைகளையும், பல சமயக் கொள்கைகளையும், மாலை வருணனை, நகர வருணனை போன்ற வருணனை களையும் இந் நூலில் படித்துணரலாம். சோழனது அரண் மனைத் தோட்டத்திலிருந்த மண்டபத்தைப் பற்றிய வருணனை வியக்கத்தக்கது. பலநாட்டுத் தொழிலாளரும் தமிழ்த் தொழிலாளரும் சேர்ந்து அமைத்த மண்டபம் அது. இதனால் தமிழரசர் பலநாட்டுத் தொழிலாளரையும் வருவித்துச் சிறந்த முறையில் மண்டபங்களையும் கட்ட டங்களையும் அமைத்துக்கொண்டனர் என்பது தெரி கிறது. சாத்தனார் பௌத்தர்; அவர் செய்த மணிமேகலை யில் பௌத்த சமயப் பிரச்சாரமே மிகுந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தைப் போலவே மணிமேகலையும் ஆசிரியப் பாவில் இயன்றது. இவை இரண்டும் இரட்டைக் காப்பியங்கள் என்று சொல்லப்படும். இவை ஒரே குடும்பத்தைப் பற்றிய இரண்டு காவியங்கள் அல்லவா!

## பெருங்கதை

இது கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றாண்டில் எழுந்தது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதுவும் அகவற்பாவால் இயன்றது; உதயணன் என்ற வடநாட்டு மன்னன் வரலாற்றைக் கூறுவது. இதனை இயற்றியவர் **கொங்கு வேளிர்** என்பவர் (கொங்கு நாட்டுச் சிற்றரசர்). இதன் தமிழ்நடை எளிமையும் இனிமையும் கொண்டது. அக்கால அணி வகைகள், பலவகை மாலைகளைத் தொடுக்கும் முறை, நாவிதன் எவ்வாறிருந்து க்ஷவரம் செய்ய வேண்டும் என்பதுபற்றிய விவரங்கள் முதலியவை இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

**சைவத் திருமுறைகள் :** கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் **சம்பந்தர், திருநாவுக்கரசர்** என்பவராலும், கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் **சுந்தரர்** என்பவராலும் பாடப்பட்ட பாக்களின் தொகுதியே **தேவாரம்** என்பது. ஒவ்வொரு திருமுறையும் பல பதிகங்களைக் கொண்டது. ஒவ்வொரு பதிகமும் பத்து அல்லது பதினைந்து பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு பதிகமும் ஒரு தலத்தில் கோவில் கொண்டுள்ள சிவபெருமானைப் பற்றியது. ஒவ்வொரு பதிகத்திலும் அத்தலத்தைப் பற்றிய இயற்கை அழகு, சிவபெருமானுடைய வீரச் செயல்கள், அத்தலத்தில் நிகழ்ந்த சமயத் தொடர்பான அற்புத நிகழ்ச்சிகள், சமணரையும் பௌத்தரையும் இழித்துரைத்தல், இராவணன் கயிலையைப் பெயர்த்த செய்தி என்பவை இடம் பெற்றிருக்கும்.

பல்லவர் காலமாகிய கி. பி. 7, 8, 9-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்து ஊர்களைப்பற்றிய விவரங்கள், அவ்வூர்கள் இருந்த நாடுகளைப்பற்றிய விவரங்கள், அரசியல் செய்திகள் சில (போர்ச் செய்திகள் உள்பட), சைவத்தின்

பெருமை, மக்களுக்குரிய அறிவுரை என்பன போன்ற செய்திகள் மூவர் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன. இசையைப்பற்றிய விவரங்கள், இசைவாணர் இருந்தமை, பலவகை இசைக் கருவிகளின் பெயர்கள், பண்களின் (இராகங்களின்) பெயர்கள், நடனம் பற்றிய குறிப்புக்கள் இன்ன பிறவும் ஆங்காங்குக் குறிக்கப்பட்டுள்ளன. 'நாயன்மார் காலத்தில் ஏறத்தாழ நானூறு ஊர்களில் சிவன் கோவில்கள் இருந்தன—அவற்றில் பூசையும் விழாக்களும் நடைபெற்று வந்தன—அவற்றுள் தில்லையும் திருவாரூரும் மிகச் சிறந்திருந்தன என்ற செய்திகளும் தேவாரத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

வடமொழியாளர் கூட்டுறவால் தமிழ்ச் செய்யுட்களில் புதியவை புகுந்தன. அவற்றுள், **தாண்டகம், விருத்தம்** முதலியன குறிப்பிடத்தக்கவை, இப் புதிய பாவினங்கள் தேவாரத்தில் இடம் பெற்றுள்ளன. வடமொழிச் சொற்களும் முன் இலக்கியங்களில் கலந்த அளவைவிடச் சிறிது மிகுதியாகத் தேவாரத்தில் கலந்துள்ளன.

## திருவாசகம் திருக்கோவையார்

இவை யிரண்டும் எட்டாம் திருமுறை எனப்படும். இவற்றைப் பாடியவர் மாணிக்கவாசகர். இவர் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு. இவர் பாடிய திருவாசகம் இவரது பக்தி அநுபவத்தைப் படம் பிடித்துக் காட்டுவது. இதன்கண் தேவாரத்தில் காணப்படாத சில தலங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவ்வாறே பல புதிய பாடல் வகைகளும் இடம்பெற்றுள்ளன. பெண்கள் பூக்களைப் பறித்துக்கொண்டே சிவபெருமானைப் பற்றிப் பாடுவது போலவும், வாசனைப் பொடியை இடித்துக் கொண்டே பாடுவதுபோலவும், ஊசல், அம்மானை முதலிய ஆட்டங்கள் ஆடிக்கொண்டே இறைவனைப்பற்றிப்

பாடுவதுபோலவும் பல பாடல்கள் காணப்படுகின்றன. மார்கழி நோன்பு பற்றிய விவரங்கள் யாவும் திருவெம்பாவை என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளன. இப் பாக்களின் நடை மிகவும் எளிமையுடையது; படிக்கப் படிக்க இன்பம் பயப்பது.

திருக்கோவையார் என்பது அகப்பொருளைப் பற்றிய முதல் கோவை நூல்; கட்டளைக் கலித்துறை என்னும் பாவினால் இயன்றது. தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் வைத்து மாணிக்கவாசகர் பாடிய இந்நூல், கோவை நூல்களுள் காலத்தால் முற்பட்டது என்று சொல்லலாம்.

**ஒன்பதாம் திருமுறை:** கருவூர்ச் சித்தர் போன்ற சிவனடியார் பலர்-நாயன்மார்களுக்குப் பின் வாழ்ந்தவர்-பாடிய பாக்களின் தொகுதி. இதில் சில புதிய தலங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. பாடல்கள் மிகவும் எளிமையானவை; சிறந்த புலமையைத் தெரிவிப்பன அல்ல.

**பத்தாம் திருமுறை:** இது திருமூலர் பாடிய திருமந்திரம் என்பது. இதன்கண் பலவகைச் சக்கரங்களின் பொருள், சைவ சமயத்தின் உட்பிரிவுகள், கோவிலின் தேவை, அரசனது பொறுப்பு, நல்லொழுக்கத்தைப் பற்றிய செய்திகள், சிவலிங்க அமைப்பு முதலிய சமயத் தொடர்பான செய்திகள் பல கூறப்பட்டுள்ளன. இது மூவாயிரம் விருத்தப் பாடல்களை உடையது. திருமூலர் கி. பி. 400—600 என்னும் கால எல்லையுள் வாழ்ந்தவர்.

**பதினோராம் திருமுறை:** கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனார், கி, பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த

பட்டினத்தடிகள், கி. பி. 11-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி என்ற பெருமக்கள் பாடிய பாடல்களின் தொகுதியே பதினோராம் திருமுறை எனப்படும். பல தலங்களைப்பற்றிய செய்திகள், விரிவான முறையில் அப்பர் வரலாறு, சம்பந்தர் வரலாறு, வேறுசில நாயன்மார்பற்றிய செய்திகள் இதன்கண் இடம்பெற்றுள்ளன, அந்தாதி, இரட்டை மணிமாலை முதலிய பிரபந்த வகைகள் (சிறுநூல் வகைகள்) இதில் காணப்படுகின்றன.

**பன்னிரண்டாம் திருமுறை:** இதுதான் பெரிய புராணம் என்பது. இது 63 நாயன்மார் வரலாறுகளைக் கூறுவது. நாலாயிரத்துக்கு மேற்பட்ட விருத்தங்களை உடையது. இந்நூல் நடை மிகவும் தெளிவானது; மிகவும் எளிமையானது; இதனைக் கொண்டு சைவசமயத்தைப்பற்றிய செய்திகளையும் சைவசித்தாந்தக் கருத்துக்களையும் பல தலங்களைப்பற்றிய விவரங்களையும் நாயன்மார் வரலாறுகளையும் பல கலைகளைப்பற்றிய விவரங்களையும், போர், அரசாட்சி, இல்வாழ்க்கை, ஒழுக்கம் பற்றிய செய்திகளையும் நன்கு அறியலாம். இதனைப் பாடிய சேக்கிழார் கி. பி. 12-ஆம் நூற்ருண்டினர்; இரண்டாம் குலோத்துங்கனிடம் முதலமைச்சராக இருந்தவர்.

**பாரத வெண்பா:** இது மூன்ரும் நந்திவர்மன் காலத்தது; எளிய நடையில் அமைந்த வெண்பாக்களைக் கொண்டது; புலமைநயம் மிக்கதன்று.

**நந்திக் கலம்பகம்:** இது மூன்ரும் நந்திவர்ம பல்லவனைப் பற்றியது. இன்றுள்ள கலம்பக நூல்களுள் காலத்தால் முற்பட்டது. நந்திவர்மன் செய்த போர்கள், அவனது தமிழறிவு, கொடைச் சிறப்பு என்பனபற்றிய செய்திகள் இதன்கண் இடம் பெற்றுள்ளன.

**சிந்தாமணி முதலியன:** சமண நூல்களான சீவக சிந்தாமணி, சூளாமணி என்பன கி. பி. 10-ஆம் நூற்றுண்டு நூல்கள் எனலாம். இவை விருத்தப்பாவில் இயன்றவை. சிந்தாமணி விருத்தப்பாவில் இயன்ற முதற் பெருங் காவியம்; நாலாயிரம் பாடல்களுக்கு மேற்பட்டது; சொல்லழகும் பொருளாழமும் பொருந்தியது. பின்வந்த பெரிய புராணம், கம்ப இராமாயணம் முதலிய பெரிய நூல்களுக்கு இது கருத்துக்களையும் சொற்களையும் சொற்றொடர்களையும் உதவியது. இதன்கண் அக்கால அணி வகைகள், உடை வகைகள், சமண சமயக் கொள்கைகள், சமணர் பழக்க வழக்கங்கள் முதலியன இடம் பெற்றுள்ளன.

## கலிங்கத்துப்பரணி

இது முதற் குலோத்துங்க சோழன் செய்த கலிங்கப் போரைப் பற்றியது. இதனைப் பாடியவர் சயங்கொண்டார். இது பரணி நூல்களுள் தலை சிறந்தது. சொல்லழகும் பொருட்செறிவும் உடையது; கவிதை நயம் சிறந்தது; சோழர் பரம்பரைபற்றிய விவரங்களும் போர்ச் செய்திகளும் தமிழர் பழக்கவழக்கங்கள் சிலவும் இதில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறே கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் ஒட்டக்கூத்தர் தக்கனது யாகத்தைப்பற்றி ஒரு பரணி பாடியுள்ளார். அவர் விக்கிரம சோழன், அவன் மகனை இரண்டாம் குலோத்துங்க சோழன், அவன் மகனை இரண்டாம் இராசராசன் ஆகிய மூவர்மீதும் மூன்று உலா நூல்களைப் பாடினர்.

## கம்பராமாயணம்

கி. பி. 12–ஆம் நூற்றுண்டின் பிற்பாதியில் மூன்றும் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்தில் கம்பரால் இராமா

யணம் பாடப்பட்டது. கம்பர் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுட்கள் பாடியுள்ளார். அவருடைய பாக்களில் சங்க நூற் கருத்துக்களும் பின்நூற் கருத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் இடம்பெற்றுள்ளன. கம்பராமாயணம் கம்பரது கவித்திறமையைக் காட்டுவது; அரசியல், சமுதாயம், நாட்டுவளம், பக்தி, ஒழுக்கம்பற்றிய அவர் கொண்டுள்ள கருத்துக்கள், அவரது ஆழ்ந்த உலக அநுபவம் இவற்றையெல்லாம் படம்பிடித்துக் காட்டுவது. ஒன்றை வருணித்துப் பாடுவதில் கம்பர் இணையற்றவர். அவரது வருணனைத் திறனைப் பூக்கொய் படலம், புனல் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம், கார்காலப் படலம், நாட்டுப் படலம், நகரப்படலம் முதலியவற்றில் சிறக்கக் காணலாம். அவரது காலத்துச் சோழநாட்டு வளத்தையும் சோணாட்டு மக்கள் வாழ்ந்த வளமான வாழ்க்கையையும் நாட்டுப் படலத்திலும் நகரப் படலத்திலும் உண்டாட்டுப் படலத்திலும் பார்க்கலாம். கம்பரது கவித் திறமைக்காகவே வைணவ நூலாகிய இராமாயணத்தைச் சைவரும் பிற சமயத்தாரும் விரும்பிப் படிக்கின்றனர்.

## சைவசித்தாந்த நூல்கள்

திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞான போதம் முதலிய பதினன்கு நூல்கள் சைவசித்தாந்த சாத்திரங்கள் எனப்படும். அவற்றில் உயிர் பசு என்றும் கடவுள் பதி என்றும் மாயை பாசம் என்றும் சொல்லப் படும். பசுவாகிய உயிர் பாசம் என்னும் மாயையைக் கடந்து பதி என்னும் இறைவனை அடையும் வழியைக் கூறுவதே இச் சாத்திரங்களின் குறிக்கோள். இதனைப் பல மேற்கோள் கொண்டும் தெளிவாக இந்த நூல்கள் விளக்குகின்றன. இவற்றுள் தலை சிறந்தது சிவஞான

**போதம்** என்பது. இதனை இயற்றியவர் மெய்கண்டார் என்பவர். இது பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்ட சிறிய நூல். இதற்கு எழுதப்பட்ட மிகப் பெரிய விளக்கமே **சிவஞான சித்தியார்** என்பது. இச் சைவசித்தாந்தம் தமிழ் மக்களது மிக உயர்ந்த சமயப் பண்பாட்டை விளக்குவதாகும். இதனை மேனாட்டு அறிஞர் மிக வியந்து பாராட்டியுள்ளனர்.

## வைணவ விருத்தி உரைகள்

ஆழ்வார் பன்னிருவரும் பாடியுள்ள நாலாயிரம் பாடல்களுக்குச் சோழர் காலத்தில் இருந்த வைணவ ஆச்சாரியர் பலர் விரிவான உரைகளை எழுதியுள்ளனர். அவற்றுள் நம்மாழ்வார் பாடிய திருவாய் மொழிக்குப் பலர் விருத்தியுரைகள் எழுதியுள்ளனர். அந்த உரை வடமொழியும் தமிழும் கலந்தது. மணியும் முத்தும் கோத்தாற்போலத் தமிழும் வடமொழியும் கலந்து எழுதப் பட்ட நடை ஆதலால் அது **மணிப்பிரவாள நடை** எனப் பட்டது. வடமொழியறிவின் துணையில்லாமல் அவ்வுரையைப் படித்துப் பொருளுணர முடியாது. அது வடமொழிப் புலவர்களான வைணவ ஆச்சாரியர்கள் எழுதிய விளக்கவுரையாதலால் இந்நிலையில் அமைந்துள்ளது. அந்த விருத்தியுரையால் அக்காலத் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களும் ஆட்சிச் சொற்களும் பிறவும் நமக்கு விளங்கும்.

**பிற்காலப் புராணங்கள் :** கி. பி. 14-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தில் தமிழரசு இல்லை. தமிழகம் முசுலிம்கள் ஆட்சிக்கும் விசயநகர வேந்தர் ஆட்சிக்கும் நாயக்கர் ஆட்சிக்கும் மகார்ராட்டிரர், கருநாடக நவாபுகள் ஆட்சிக்கும், இறுதியில் மேனாட்டார் ஆட்சிக்கும் உட்பட்டது. இங்ஙனம் தமிழகம் வேற்று மொழி

யாளர் ஆட்சிக்கு உட்பட்டதால் தமிழ்ப்புலவர்கள் பரணி போன்ற நூல்களையோ அரசர் தூண்டுதல்மீது பெரிய காவியங்களையோ பாட வசதி இல்லை. தமிழ்ப்பெரும் புலவர்களை ஆதரிப்பாரில்லை. அடிமைப்பட்ட நாட்டில் புலவர் பெருமிதம் ஒழிந்தது. அவர்கள் ஊரடங்கி வாழ லாயினர். அப்பொழுது கோவில்கள் தாம் ஊர் மக்களுக்கு நடுவிடம்—உயிர்நாடி. ஆதலால் புலமை எழுச்சி கொண்ட புலவர்கள் மன்னரைப்பற்றிப் பாட வழியின்றி, இறைவனைப் பற்றிப் பாடலாயினர். இம் முயற்சியில் எழுந்தவையே திருவிளையாடற் புராணம் போன்ற **தல புராணங்கள்**. வடமொழியில் எழுதப்பெற்ற தல புராணங்கள்—கந்த புராணம் போன்றவையும்—தமிழில் பாடப்பெற்றன.

புராணங்களில் கூறப்பட்டுள்ள கதைகளுள் பெரும் பாலான கற்பனையின்பாற்படும். ஆயினும் அவற்றில் இலக்கியச் செல்வம் மிகுந்து இருக்கிறது. பின் நூற் றுண்டுகளின் நகரங்களின் அமைப்பு, நாடுகளின் நிலைமை, மக்களுடைய நம்பிக்கைகள், பழக்க வழக் கங்கள், ஆடையணிகள், கலைகளின் நிலைமை இன்ன பிறவும் இப் புராணங்களில் அந்தந்த நூற்றுண்டில் வாழ்ந்த புலவர்களால் குறிக்கப்பட்டுள்ளன. **கந்த புராணம்** ஏறத்தாழக் கி. பி. 16-ஆம் நூற்றுண்டில் செய்யப்பட்டது எனலாம். அதன்கண் தெய்வயானையின் திருமணச் செய்தி காணப்படுகிறது. திருமணத்தின் போது அவ்வம்மை அணிந்துகொண்ட நகைகளின் பெயர்கள் கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ளன. அவை புலவர் வாழ்ந்த காலத்து நகைகள் என்பதை நாம் உணரலாம். இவ்வாறு ஒவ்வொரு புராணத்திலும் குறிப்பிடத்தக்க செய்திகள் சில நமக்குக் கிடைக்கின்றன. இச் செய்திகளோடு தமிழ்ச் செய்யுட்களைப் பற்றிய

விவரங்களும் புலவர் கையாண்ட அணிகளும் பிறவும் மொழிநடையும் நாம் அறிந்துகொள்ள இப் புராணங்கள் துணை செய்கின்றன. எனவே, புராணங்களில் கூறப் படும் கதைகளுக்கு மதிப்பைத் தராமல், அவற்றில் காணப்படும் பயன்தரும் செய்திகளையே அறிஞர் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த முறையில் பார்த்தால், புராண இலக்கியம், தமிழிலக்கிய வரலாற்றுக்கும் தமிழர் நாகரிகம், பண்பாடு இவற்றிற்கும் பெருந்துணை செய்ய வல்லது என்று துணிந்து கூறலாம்.

## சிறு நூல்கள்

பிற்பட்ட புலவர்கள் சமயத்துறையில் புராணங்கள் பாடியதுபோலவே, சமயத் தொடர்பான உலா, கலம்பகம், கோவை, அந்தாதி, பிள்ளைத்தமிழ், இரட்டை மணிமாலை, நான்மணிமாலை முதலிய சிறு நூல்களைப் பாடினர். மதுரைச் சொக்கநாதர் உலா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம், அழகர் கிள்ளைவிடு தூது, திருவேங்கடத்து அந்தாதி, நால்வர் நான்மணிமாலை முதலிய சிறு நூல்களே இக் கூற்றிற்கு ஏற்ற சான்றாகும். தமிழ்ப் புலவர்களேயல்லாமல் கிறித் தவப் புலவர்களும் சமய நூல்களையே செய்தனர். வீரமா முனிவர் பாடிய தேம்பாவணி, திருக்காவலூர் கலம்பகம் முதலியன இதற்கு ஏற்ற சான்றும். முசுலிம் புலவர்களும் சீறாப் புராணம், முகையதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் முதலிய சமய நூல்களையே பாடினர். பாளையக்காரர்கள் காலத்தில் 'கூளப்ப நாயக்கன் காதல்', மடல், சந்திர விலாசம் போன்ற சிற்றின்ப நூல்கள் சில தோன்றின. இவை பாளையக்காரரை இன்புறுத்த எழுந்தவை.

பிற்காலச் சமய நூல்களுள் **சித்தர் நூல்கள்**, தாயு மானவர் பாடல்கள், குமரகுருபரர் பிரபந்தங்கள், சிவப்

பிரகாச சுவாமிகள் பிரபந்தங்கள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை நூல்கள் என்பவை குறிப்பிடத் தக்கவை. இராம நாடகம், குறவஞ்சி நாடகம், பள்ளு முதலிய நாடக நூல்கள் சிலவும் இக்காலத்தில் தோன்றின. தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர்மீது பாடப்பட்ட குறவஞ்சி நாடகமும், குற்றாலக் குறவஞ்சி யும் குறிப்பிடத்தக்கவை. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை செய்த 'மனோன் மணீயம்' என்னும் நாடக நூல் போற்றத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வியின் ஊக்கத்தால் தமிழில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. தமிழில் உரைநடை நூல்கள் பெருகின. சங்கநூற் செய்திகளும் இடைக்கால நூற் செய்திகளும் பிறவும் உரை நடை நூல் களாக வெளிவந்தன. கல்விச் சாலைகள் ஏற்பட்டமை யால் பாடநூல்கள் மிகுதிப்பட்டன. உலக அறிவை ஊட்டக்கூடிய பல நூல்கள் தமிழில் தோன்றின. சமுதாய சீர்திருத்தத்தை வற்புறுத்தும் செய்யுள் நூல்களும் உரை நடை நூல்களும் எழுந்தன. மேனாட்டுச் சிறு கதைகளையும் பெருங்கதைகளையும் (நாவல்களையும்) தழுவித் தமிழில் சிறுகதை நூல்களும் பெருங்கதை நூல் களும் பெருகின; இன்றும் பெருகிக்கொண்டே வரு கின்றன. நாடகக்கலை நன்கு வளர்ச்சிபெற்று வருகிறது. அதனால் எண்ணிறந்த நாடக நூல்கள் தமிழில் எழுதப் பட்டு வருகின்றன. பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம் போன்ற கவிஞர்கள் சமுதாய சீர்திருத்தம் பற்றியும் பிற பொருள்பற்றியும் எளிய இனிய செய்யுட்களைப் பாடியுள்ளனர். நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் இன்று சிறந்த செய்யுட் களை இயற்றி வருகின்றனர்.

## செய்தித் தாள்கள்

தமிழில் நாள் வெளியீடுகள், வார வெளியீடுகள், திங்கள் வெளியீடுகள் எனப்பல வெளியீடுகள் வெளி வருகின்றன. பெரும்பாலான தாள்களில் நல்ல தமிழ் நடை எழுதப்படுகிறது. அவற்றில் சிறுகதை, கவிதை, தொடர்கதை, ஆராய்ச்சிக் கட்டுரையைப் போன்ற பல் பொருள் கட்டுரைகள் என்பன வெளிவருகின்றன. தமிழ்நாட்டு வானொலி நிலையங்கள் அறிஞர் பேச்சுக்களை வெளியிடுகின்றன. வானொலி இலக்கியம் சிறந்த அறிவைத் தருவதாகும். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சிபெறுமல் இருந்த தமிழ் உரைநடை இந்த 20-ஆம் நூற்றுண்டில் வியத்தகு முறையில் வளர்ச்சி அடைந்து வருகிறது. விஞ்ஞான நூல்களும் மேனுட்டுக் கலையும் தொழிலும்பற்றிய நூல்களும் தமிழில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டைப் பற்றியே பேசிவந்த பண்டைய இலக்கிய நிலை மாறி விட்டது. இன்றைய இலக்கிய நூல்கள் உலகநாடுகளைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் எளிதில் நாம் அறியத்தகு முறையில் வெளிவந்திருக்கின்றன; இனியும் தொடர்ந்து வெளிவரும்.

# 10. இலக்கியம் - II

## இலக்கியம் தோன்றுவதற்கான காரணங்கள்

1. அறிஞன் தன் ஆழ்ந்த எண்ணங்களை வெளிப்படுத்த இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான்;

2. கடந்தகால நிகழ்ச்சிகளைத் தன் கால மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களது வாழ்வைச் செம்மைப்படுத்த இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான்;

3. தன்காலத்து நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்டு அவற்றின் தன்மைகளை மக்கள் உணருமாறு செய்ய ஆர்வங்கொண்டு இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான்;

4. மன்னர்கள், வள்ளல்கள் முதலியோரை இன்புறுத்தவும், இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறான்;

5. தன் சமயத்தைச் சிறப்பிக்கவும் பிற சமயங்களைத் தாழ்த்தவும் இலக்கியத்தைப் படைக்கிறான்; தன் கால நிலைக்கேற்ற—பெரும்பாலான மக்கள் விரும்பத்தக்க கருத்துக்களைக் கொண்ட—இலக்கியத்தை உருவாக்குகிறான்.

## எது இலக்கியம்?

மனிதன் செய்த நூல்கள் எல்லாம் இலக்கியம் என்று கொள்ளப்படும். ஆனால் சமுதாயத்தை உருப்படுத்தும் உயர்ந்த கருத்துக்களைக்கொண்டு மக்கள் உள்ளங்களைக்

கவரவல்லதாய் இயன்றுள்ள நூலே சிறந்த இலக்கியம் என்று துணியப்படும். அதுவே என்றும் இறவாத புகழுடையது. சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெரியபுராணம், தேம்பாவணி போன்ற இலக்கியங்கள் இவ்வகையில் அடங்கும்.

சமுதாய வாழ்வினை உள்ளவாறு எடுத்துக்கூறும் தொகை நூல்கள் முதல்தரத்தவை.

அரசர்க்காக எழுந்த போர், உலா முதலியனபற்றிய இலக்கியங்கள் சிறந்த நீதிகளைக் கொண்டவை அல்ல. அவற்றை இரண்டாந்தர இலக்கியம் என்று கூறலாம்.

சிறந்த படிப்பினைகளை உள்ளடக்கிய பெருங்கதைகளும், சிறுகதைகளும், பாடல்களும் மூன்றாந் தரத்தவை.

சமய வெறிகொண்டு கற்பனையையே உயிர்நாடியாக வைத்து மனித உணர்ச்சியோடு கலவாத முறையில் செய்யப்பெற்றுள்ள தலபுராணங்கள் நான்காந் தரத்தவை.

சொல்லணிகளைக் காட்டவும் மனிதனது பலதிறப்பட்ட எழுச்சிகளை உணர்த்தவும் பாடப்பெற்ற 'கலம்பகம்' போன்ற சிறு நூல்கள் ஐந்தாம் தரத்தவை.

ஒரு பயனுமின்றிப் பொழுதுபோக்குக்காகவே எழுதப்பட்ட இலக்கியம் கடைப்பட்டவை.

## பல்வேறு நூல்களால் ஏற்படும் பயன்கள்

### 1. தொகை நூல்களால் அறியப்படுவன

1. சங்ககாலத் தமிழகத்தில் இருந்த பேரரசுகள், சிற்றரசுகள், அவற்றின் ஆட்சிமுறை—அரசர்தம் கல்வி, போர், கொடை முதலிய பண்புகள்.

2. புல்வர்களின் இயல்புகள்

3. பொதுமக்களின் கல்வி நிலை, ஆடவர் பெண்டிர் இயல்புகள்

4. சமயநிலை

5. மறக்குடி மக்களின் இயல்புகள்

6. நாட்டினுடைய விளைபொருள்கள், செய் பொருள்கள்

7. உள்நாட்டு வாணிகம், கடல் வாணிகம்-அயல் நாட்டு உறவு

8. கலை வளர்ச்சி

9. நாகரிகம்

10. பண்பாடு

## 2. நீதி நூல்களால் அறியப்படுவன

திருக்குறள் போன்ற நீதி நூல்கள் அரசியலைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும், இல்வாழ்க்கை பற்றியும் இம் மூன்றுக்கும் தனி மனிதனுக்கும் உள்ள தொடர்புபற்றியும் பல விவரங்களைத் தெரிவிக்கின்றது ; ஒவ்வொருவனும் சமுதாயத்தில் நல்ல குடிமகனாக வாழ் வதற்கு வேண்டும் விதிகளை வரையறுத்துக் கூறுகின்றது. இவ்வாறே நாலடியார் பழமொழி முதலிய நீதி நூல்களும் சிலசில நெறி முறைகளைக் கூறுகின்றன. இவையாவும் மனிதனை நன்னெறிப்படுத்த எழுந்தவை. இவை அற நூல்கள் என்றும் சொல்லப்பெறும். (அறம் - ஒழுக்கம்) இவை எல்லாச் சமயத்தார்க்கும் ஏற்ற பொது நூல்கள்.

## 3. காவிய நூல்கள்

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ நடந்த அல்லது நடந்ததாக நம்பப்பட்ட ஒரு நிகழ்ச்சியைப் புலவன் தன் புலமைத் திறத்தால் பல்வேறு காட்சிகளைச் சேர்த்து மனித உள்ளத்திற்குப் பொருந்துமாறு அமைத்து இடை

யிடையே பல படிப்பினைகளைச் செருகி அழகுபெற அமைப்பது காவியம் எனப்படும். இதுவே சங்ககாலக் காவியத்தின் இலக்கணம்.

கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் தண்டியலங்காரம் என்ற ஓர் அணி இலக்கண நூல் தமிழில் வெளியிடப் பட்டது. அது வடமொழியில் எழுதப்பெற்ற 'காவியா தர்சம்' என்னும் அலங்கார நூலின் மொழிபெயர்ப்பு. அதில் 36 பொருளணிகளும் பல சொல்லணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வோர் அணிக்கும் பல உட்பிரிவுகள் உண்டு. தொல்காப்பியர் உவமையையே சிறப்பணி யாகக் கொண்டார்; அதற்கென்று ஓர் இயலையும் வகுத் தார். ஆனால், காலப்போக்கில் வடமொழியாளர் தொடர் பால் அணிகள் பெருத்துவிட்டன.

'தண்டியலங்கா'ரத்தில் காவியம்—பெருங்காவியம், சிறு காவியம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதன் படி பெருங்காவியத்தின் இலக்கணம் பின்வருமாறு:

வாழ்த்து, வணக்கம், எடுத்துக்கொண்ட பொருள் என்னும் மூன்றில் ஒன்றைப் பாயிரம் பெற்றிருத்தல் வேண்டும்; நாற்பொருள்களையும் பயக்கும் நீதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்; தன்னிகரில்லாத் தலைவனைப் பெற்றிருத்தல் வேண்டும்; மலை, ஆறு, கடல், நாடு, நகரம், பருவங்கள், சூரியன் தோற்றம், சந்திரன் தோற் றம் என்பவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் வருணித்தல் உடையதாக இருத்தல் வேண்டும்; திரு மணம், முடிசூட்டு, பொழில் விளையாட்டு, புனல் விளை யாட்டு, உண்டாட்டு, புதல்வரைப் பெறுதல், கலவியிற் களித்தல், புலவியிற் புலத்தல் என்பவற்றைப் பெற் றிருத்தல் வேண்டும்; மந்திரம் (யோசனை), தூது, மேற் செலவு (படையெழுச்சி), போர் புரிதல், வெற்றிபெறுதல் என்பவற்றை வருணித்தல் உடையதாய் இருத்தல்

வேண்டும். சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பாகுபாடுகளுள் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். காவியத்தில் மிக்க சுவையும், பாவமும் யாவரும் விரும்பத் தக்க அமைப்பும் அமைந்திருத்தல் வேண்டும்.

## காப்பியங்களால் அறியப்படுவன

1. குறிஞ்சி முதலிய திணைகளின் இயல்புகளும் அத்திணை மக்களின் பழக்க வழக்கங்களும் அறியலாம்.

2. கதைத் தொடர்புடைய நகரங்களின் அமைப்பு, நகரமக்களின் தொழில், அவர்தம் பழக்க வழக்கங்கள், சமயங்களின் நிலைமை, ஆட்சிமுறை முதலியவற்றை அறியலாம்.

3. கதையின் உயிர்நாடியாக விளங்கும் தலைவன், தலைவி இவர்தம் நற்பண்புகளையும், அவற்றால் அவர் பெற்ற சிறப்புக்களையும், தீயபண்புகளாயின் அவற்றால் அவர் பெற்ற இழிநிலையினையும் அறியலாம்.

4. நாட்டு வரலாறு பற்றிய செய்திகளையும் அறிய வாய்ப்புண்டு.

5. விழாக்கள், சடங்குகள், மணமுறை இன்ன பிற வற்றையும் தெளியலாம்.

6. காவியம் எழுந்ததன் கருத்தையும் உணரலாம்.

7. காவிய காலத்தில் நாடு இருந்த நிலையையும், மக்களுடைய நாகரிகம் பண்பாடு ஆகிய இவற்றையும் ஒருவாறு கண்டறியலாம்,

8. இவையனைத்திற்கும் மேலாக மனித நலத்திற்கு அக்காவியம் எவ்வகையில் பயன்படுகிறது என்பதையும் கண்டு தெளியலாம்.

## சமய நூல்களால் அறியப்படுவன

1. ஒருநூல் எந்தச் சமயத்தைச் சார்ந்ததோ அச் சமயத்தின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் அந் நூலைக் கொண்டு அறியலாம்.

2. தலந்தோறும் சென்று பாடப்பெற்ற திருமுறை நூல்களால் பல தலங்களைப் பற்றிய அமைப்புக்களை அறியலாம். இயற்கை, செயற்கைக் காட்சிகளை அறிந்து இன்புறலாம்,

3. பல கோவில்களைப் பற்றிய விவரங்களை உணரலாம். நாட்டில் வழக்கிலிருந்த வழிபாட்டுமுறைகள், விழாக்கள், பலகடவுளர் பெயர்கள் முதலிய பலவற்றை அறியலாம்.

4. அடியார்கள் சமயத்திற்காகச் செய்த தொண்டுகளை உணரலாம்.

5. இறைவனைப் பற்றி நாட்டில் வழங்கிய வரலாறுகள் பலவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

6. கோவில்களின் அமைப்பு முறைகளையும் வகைகளையும் அறியலாம்.

7. புறச் சமயங்களைப் பற்றிய கொள்கைகளையும் தெளியலாம்.

8. நாட்டு வரலாற்றுத் தொடர்பான குறிப்புக்களையும் ஓரளவு உணரலாம்.

9. பாவகைகள் எங்ஙனம் வளர்ச்சி பெற்றன என்பதையும் ஓரளவு காணலாம்.

10. அக்கால வழக்கிலிருந்த தமிழ்ப்பண்கள் எவை என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

11. சமயகால மக்களுடைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், பொருளாதார நிலை, கல்வி நிலை, முதலியவற்றை அறியலாம்,

## சமய விரிவுரை நூல்களால் அறியப்படுவன

ஆழ்வார்கள் அருளிச் செய்த அருட்பாடல்களுக்குப் பின்வந்த வைணவப் பெரியார்கள் விரிவான உரை வகுத்தனர். அவர்கள் வடமொழியிற் பெரும் புலவர்கள் ஆனதால் அவர்தம் விரிவுரைகளில் வடமொழி பாதியளவும் தமிழ்மொழி பாதியளவும் அமைந்து விட்டன. எனவே அவர்களது நடை 'மணிப்பிரவாள நடை' எனப்பட்டது. அவர்களது விரிவுரை தமிழ்மட்டும் படித்தவரால் படிக்கக்கூடவில்லை அதனோற்றன் படித்த புலவர்களுக்கும் அவ்விரிவுரைகளின் அருமையும் பெருமையும் தெரியாத நிலையில் அமைந்துவிட்டன.

அவ்விரிவுரை அக்காலத்தில் நிலவியிருந்த வைணவ சமய நடைமுறைகளையும் அச்சமயத்தார் கையாண்டு வந்த பழக்க வழக்கங்களையும் நன்கு தெரிவிக்கின்றன. உரையாசிரியர்கள் உலகியல் அறிவு மிக்கவர்கள். ஆதலால் உலகியல் செய்திகளையே உவமைகளாகக் கூறிப் பொருள்களை விளக்கியுள்ளனர். இறந்த பசுக் கன்றின் தோலைப் பிரித்து எடுத்து அதன்கண் வைக் கோலைச் செருகிக் கன்றுபோல் அமைத்துத் தாய்ப்பசுவை ஏமாற்றிப் பால்கறக்கும் நிலைமை இன்று இருந்து வருகிறது. இதே நிலைமை உரையாசிரியர்கள் காலத்தும் இருந்தது என்பதை அவர்கள் உரை தெரிவிக்கின்றது. இவ்வுவமைகளால் அவர்கால மக்களுடைய பழக்க வழக்கங்களையும் பிறவற்றையும் நாம் அறிய வாய்ப்பு உண்டாகிறது. அரிய உரை எழுதிய அப்பெருமக்களின் சமயநூற் புலமையையும், பிறநூற் புலமையையும், உலகியல் அறிவையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'சிவஞான போதத்திற்கு, விருத்தியாக 'சிவஞான சித்தியார்,

எழுதப்பட்டது. அதன்கண் காணப்படும் பல சமயங்களைப் பற்றிய விளக்கங்கள், பல சமயங்களைப் பற்றிய கொள்கைகளையும், ஒன்றுக்கொன்று அமைந்த வேறுபாடுகளையும் நாம் அறியத்துணை செய்கின்றன.

கி. பி. 18-ஆய் நூற்றாண்டில் தோன்றிய சிவஞான முனிவர் சிவஞான போதத்திற்கெழுதியுள்ள பேருரை, அவரது சைவநூற் புலமையையும், பிற சமயநூற் புலமையையும், இலக்கிய இலக்கணப் புலமையையும் பறையறைந்து காட்டுகின்றன. தருக்கக்கலையில் அவருக்கிருந்த பேராற்றலையும் அப்பேருரை விளக்கி நிற்கின்றது, சமயத்தின் மூலக்கொள்கைகள் எவை, அவற்றை எவ்வாறு தக்க சான்று காட்டி நிறுவுவது அல்லது மறுப்பது என்பன போன்ற விவரங்களை இப்பேருரை கொண்டு நன்கு தெளியலாம்.

## சிறு நூல்களால் அறியப்படுவன

வடமொழியாளர் சிறு நூல்களைப் 'பிரபந்தங்கள்' என்பர்; அவை 96 வகை என்பர். அம்மானை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், அந்தாதி, இரட்டை மணிமாலை, நான்மணிமாலை, பன்மணிமாலை, பரணி, மடல் முதலியன சிறு நூல்களிற் சிலவகைகளாகும்.

உலா, பரணி, பிள்ளைத்தமிழ், கலம்பகம் என்பன இறைவனைப் பற்றியும் அரசனைப் பற்றியும் பெருமக்களைப் பற்றியும் எழுவன. மற்றவை சமயத்தொடர்பாலும் பல்வேறு பொருள்பற்றியும் தோன்றுபவை. இவற்றைப் படிப்பதால் அவவக்கால அரசர்களைப் பற்றிய விவரங்களை (போர்ச் செயல்கள், உடைச்சிறப்பு, அணிச்சிறப்பு, கொடைச்சிறப்பு, பிற பண்புகள் முதலிய பலவற்றை) அறியலாம். இவை வரலாற்றிற்குத் துணை செய்யும். பல தலங்களைப் பற்றிய விவரங்களை அறியலாம். அடி

யார்களைப் பற்றிய செய்திகள், பொதுமக்களைப் பற்றிய செய்திகள், மதங்கியார், பிச்சியார், கொற்றியார், களிமகன், மறவர் போன்ற மக்களைப் பற்றிய விவரங்கள் இன்ன பிறவும் ஓரளவு அறியலாம். உலா நூல்களில் ஏழு பருவப் பெண்களைப் பற்றிய குணம், குறி, செயல்கள் விவரமவாகக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு சிறு நூலிலும் நாம் அறியத்தகும் செய்திகள் பலவுண்டு. 'சிறுதுரும்பும் பல்குத்த உதவும்' என்பது போல, இச்சிறு நூல்களும் அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு, சமய வரலாறு, மக்களுடைய பழக்க வழக்கங்கள், நாகரிகம், பண்பாடு முதலியவற்றை அறியத் தம்மால் இயன்ற அளவு துணை செய்கின்றன,

## தல புராணங்களால் அறியப்படுவன

1. ஒவ்வொரு தலபுராணத்திலும் நாட்டுப் படலம் நகரப்படலம் என்பன அமைந்திருக்கின்றன. அவற்றைக்கொண்டு அப்புராணம் எழுந்த நூற்றுண்டில் இருந்த நாட்டு அமைப்பினையும் நகர அமைப்பினையும் நன்கு அறியலாம். இந்த முறையில் புராணங்களைத் தவிர வேறு இலக்கியம் இந்த அளவு உதவி செய்தல் இயலாது.

2. மருத்துவம், வான நூற்கலை, இசைக்கலை, பற்றிய செய்திகளை அறியலாம்.

3. நூல் எழுந்த காலத்தில் நடைமுறையிலிருந்த அணிவகைகள், உடைவகைகள், ஒப்பனை முதலியவை பற்றிய விவரங்களை உணரலாம்.

4. நூல் எழுந்த காலத்துத் தமிழ்ச் செய்யுள் நடை, வழக்கிலிருந்த சொற்கள், அணி வகைகள் முதலியவற்றை அறியலாம்,

5. வழிபாட்டு முறைகள், சமயநிலே, சமயக்கொள்கைகள், சமய வழக்காறுகள் முதலியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

6. நாட்டுப் படலம் நகரப்படம் இவற்றைக் கொண்டு நாட்டு மக்களுடைய தொழில் முறைகளேயும் ஓரளவு அறியலாம்.

## கதை நூல்களால் அறியப்படுவன

புனேந்துரை, ஓரளவு வரலாறு, கடன் பெற்ற கதைகள் எனக் கதை நூல்கள் பல்திறப்படும். இவை பெரும்பாலும் புனேந்துரை நூல்களே. இவை மக்கள் உணர்ச்சிகளேயும்செயல்களேயும் அடிப்படையாக வைத்து எழுதப்படுவன. மனிதரிடம் காணப்படும் நற்பண்புகளால் நடைபெறும் நற்செயல்களும், தீய பண்புகளால் நடைபெறும் கீழ்த்தரச் செயல்களும் இவற்றில் படம் பிடித்துக் காட்டப்படும். மனித உணர்ச்சிகளேப் பயன்படுத்த வேண்டும் என்னும் நல்லெண்ணத்திஞல் இவை எழுதப்படுபவை.

வரலாற்றுக் கதைகளில் வரலாற்றுத் தொடர்பான இடங்கள்பற்றிய விவரங்களும் இடையிடையே வரும். இவையெல்லாம் மனித உணர்ச்சிக்கு இன்பமூட்ட வல்லவை.

சிறுகதைகள் ஒரு குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்திச் சுருங்கக் கூறுவது ஆயினும் படிப்பினே உடையவை. இத்தகைய சிறுகதை பெருங்கதைகளேப்படிப்பதால் மனித உள்ளம் சிந்திக்கும் ஆற்றலே வளர்க்கின்றது. சிறந்த தமிழறிஞர் மு. வ.-வின் நடையும் நமக்குப் பயன்படும்.

## கட்டுரை நூல்களால் அறியப்படுவன

வருணனே, அறிவியல், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம், கலேகள் முதலிய பல பொருள்களேப் பற்றிக்

கட்டுரைகள் தோன்றும். இவை பலதுறை அறிவை ஊட்டவல்லவை. ஆராய்ச்சிக் கட்டுரைகள் அறிவுசெறிந்த நிலையில் படிப்போர்க்குப் பயன்படும். பொதுவாகக் கட்டுரை நூல்களை மிகுதியாகப் படிப்பது அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்யும்.

## இலக்கண நூல்களால் அறியப்படுவன

பிற மொழிகளில் இலக்கணம் என்பது எழுத்தையும் சொல்லையும் பற்றியது. ஆனால், தமிழ் மொழியில் இலக்கணம் என்பது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றைப் பற்றியது. வாழப் பிறந்த மனிதன் தன் கருத்துக்களைப் பிறருக்கு வெளியிடக் கடமைப்பட்டவன். அங்ஙனம் வெளியிட மொழி தேவைப்படுகிறது. மொழிக்குச் சொற்கள் தேவை. சொற்களுக்கு எழுத்துக்கள் தேவை. எனவே, மனிதனுக்கு எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், அச் சொல் வெளிப்படுத்தும் பொருளிலக்கணம் ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது. மக்களுடைய உச்சரிப்பால் காலப்போக்கில் குறித்த பொருளைத் தருவதாயும் சொல் வேறுபடுகிறது. அத்தகைய சொற்கள் எவை என்பதைச் சுட்டவேண்டியது இலக்கண ஆசிரியரின் கடமை. ஆதலின் உச்சரிப்பு வேறுபாட்டால் சில சொற்களிலுள்ள எழுத்துக்களுக்குப் பதில் வேறு எழுத்துக்கள் இடம் பெறுதலும் உண்டு. [காட்டாக, சாம்பல்—சாம்பர்.] இத்தகைய மாற்றங்களையும் ஆசிரியன் கூறக் கடமைப்பட்டவன். சொற்கள் ஒரு காலத்தில் வழக்கிலிருந்து பிற்பட்ட காலங்களில் வழக்கொழிந்து போகும். அவை வழக்கில் இருந்தபோது எழுதப்பட்ட இலக்கியங்களில் அவை இடம் பெற்றிருக்கும். அவை வழக்கு வீழ்ந்தகால மக்கள் அவ்விலக்கியங்களைப் படிக்கும்போது சொற்பொருள் தெரியாமல் இடர்ப்படுவர். எனவே, அவ்வற்றைக் குறிக்க வேண்டுவது இலக்கண ஆசிரியன்

கடமை. ஒரு காலத்தில் ஒரு பொருளில் வழங்கிவந்த சொல் பின் நூற்றுண்டுகளில் வேறு பொருள்களை யுணர்த்த வருதலும் உண்டு. இம்முறையில் எழுந்த வையே—ஒரு பொருள் குறித்த பல சொற்கள், பல பொருள் குறித்த ஒரு சொல்—என்பவை. இங்ஙனம் ஆழ்ந்து நோக்குங்கால் மக்கள் வழக்காறுகள் கூறுவது இலக்கணம் என்பது பெறப்படும். மக்கள் பயன்படுத்தும் சொற்களையும் அவற்றின் பல்வேறு பொருள்களை ஆராய்ந்து மக்களுடைய அழுந்திய உச்சரிப்பால் இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்ன பொருள்களை உணர்த்துகின்றன என்னும் நுட்பங்களையும் அறிந்து இலக்கணம் செய்தல் வியந்து பாராட்டற்குரியது.

மனித வாழ்க்கையை அகம் புறம் என இரண்டாகப் பிரித்தனர் நம் முன்னோர். ஆகவே, அவ்வாழ்வுக்குரிய செயல்களெல்லாம் இலக்கண முறையில் வகுக்கப்பட்டன. அவற்றைக் கூற எழுந்ததே பொருள் இலக்கணம். இங்ஙனம் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த மனித இனம் தமிழ் இனமேயாகும். இம் மூன்றையும் படிப்பதால் பழங்காலத்திலிருந்த சொற்கள், மக்களுடைய பலதிறப் பட்ட வாழ்க்கை முறைகள், அரசு, போர், சமயநிலை, பழக்க வழக்கங்கள், விழாக்கள், கல்வி முறை, நாகரிகம், பண்பாடு முதலிய அனைத்தும் தெரிந்துகொள்ள வாய்ப் புண்டாகிறது. தொல்காப்பியம் சங்ககாலச் (மேற் கூறப் பெற்ற) செய்திகளை உணர்த்துகின்றது. வீரசோழியமும், நன்னூலும் சோழர்காலச் செய்திகளையும், மொழி நிலையை யும் உணர்த்துகின்றது. யாப்பருங்கலவிருத்தி போன் றவை யாப்பிலக்கண வளர்ச்சியை விரிந்த அளவில் தெரி விக்கின்றன.

இலக்கண உரைகள் ஊன்றிப் படிக்கத்தக்கவை. அவை பிற இலக்கியங்களில் காணப்பெறாத அரிய செய்தி

களையும் வழக்காறுகளையும் பிறவற்றையும் இனிது உணர்த்துகின்றன. யாப்பருங்கல விருத்தியுரை அவ்வுரையாசிரியர் காலத்திலிருந்த யாப்பிலக்கண நூல்களின் பெயர்களையும் சூத்திரங்களையும் யாப்பிலக்கண வளர்ச்சியையும் வேறு பல உண்மைகளையும் தெரிவிக்கின்றது.

## கலை நூல்களால் அறியப்படுவன

பழந்தமிழ் நூல்களுள் ஓவியம் சிற்பம்போன்ற கலைகளுக்கென்று அமைந்த தனி நூல்கள் இல்லை. காலப் போக்கில் அவை அழிந்துவிட்டன. பின்—நூற்றுண்டுகளில் செய்யப்பட்ட பரதசேனுபதீயம் முதலிய ஒன்றிரண்டு நூல்கள் நடனக்கலையைக் குறிக்க இருக்கின்றன. அவற்றைச் செம்மையாகப் படித்து அக்கலையின் சிறப்பை நாடறியச் செய்யும் நன்மக்கள் இக்காலத்தில் இல்லை. இந்த நிலையில் புலமையும் ஆராய்ச்சியும் ஓரளவு பெற்றுள்ள தமிழறிஞர்கள் நூல்களையும், பழங்காலக் கட்டடங்களையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் பற்றி ஓரளவு விளக்கி நூல்களை வரைந்துள்ளனர். அவற்றைக்கொண்டே பண்டைத் தமிழகத்துக் கலைகளைப்பற்றிய செய்திகளை நாம் ஓரளவு அறிகின்றேம்.